பக்கங்கள்:-பத்து | Registered as a News paper in Sri Lanka | விலை ரூபா. 6.00

# வலம்புரி

Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | புரட்டாதி 22 | வியாழக்கிழமை | (09.10.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 294

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## மீள்குடியமர்வு-தேர்தல் அமைப்பு

## கூட்டமைப்பினர் விரைவில் பிரதமரைச் சந்தித்துப் பேசுவர்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைக்குழுக் கூட்டம் நேற்று கொழும்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டமைப்பின் இணைப்பாளர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களின் மீள் குடியமர்வு, தேர்தல் முறை மாற்றியமைப்பு மற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியரின் நியமனம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக ஆராய்வதற்காக எதிர் வரும் 16-ந் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்திப்பதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இச் சந்திப்பின் போது படைத்தரப்பைச் சேர்ந்த எவரும் கலந்து கொள்ளக் கூடாதென பிரதமரை வலியுறுத்திக் கேட்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.அத்துடன் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

(10ம் பக்கம் பார்க்க)

## வீதியால் சென்ற பெண்ணை இராணுவ பஸ் மோதியது!

### சாவகச்சேரியில் சம்பவம்

### மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்

(சாவகச்சேரி)

குடும்பப் பெண்மீது இராணுவ வாகனம் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தை அடுத்து சாவகச்சேரி நகரப்பகுதியில் நேற்று மாலை பெரும் பதற்றம் நிலவியது.

கச்சாயிலிருந்து இராணுவச் சிப்பாய்களை சாவகச்சேரி நகர முகாமுக்கு ஏற்றி வந்த இராணுவ பஸ், வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த குடும்பப் பெண் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இச் சம்பவத்தில் சாவகச்சேரி கச்சாய் வீதியில் வசிக்கும் ராம்குமார் ஜேசுராணி (வயது 27) என்ற குடும்பப் பெண் படுகாயமடைந்துள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

# குரங்குப்பாஞ்சான் முகாமுக்கு செய்தியாளர்கள் நேரில் விஜயம்

## நிலைமைகளை புலிகள் விளக்கினர்

(நமது திருகோணமலை நிருபர்)

**இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற யுத்த நிறுத்த உடன்பாட்டிற்குப் பின் விடுதலைப் புலிகள் வடக்குக் கிழக்கில் எந்தவொரு புதிய முகாம்களையும் அமைக்கவில்லை, தென் பகுதி ஊடகங்களின் தவறான செயற்பாட்டினாலேயே குரங்குப்பாஞ்சான் முகாம் விவகாரம் சர்வதேச விவகாரமாகமாறியது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக் தெரிவித்துள்ளார்.**

சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் விடுதலைப் புலிகளின் குரங்குப்பாஞ்சான் முகாம் பகுதிக்கு தென் இலங்கையைச் சேர்ந்த சுமார் 50 ஊடகவியலாளர்கள் நேற்று நேரில் விஜயம் செய்து நிலைமைகளை அறிந்து கொண்டார்கள்.

ஊடகவியலாளர்கள் குரங்குப்பாஞ்சான் முகாமுக்குச் செல்ல விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக் ஏற்பாடு செய்திருந்தார்.

கிண்ணியா குரங்குப்பாஞ்சான் முகாம் பகுதி அரச கட்டுப் பாட்டுப் பிரதேசம் என்று அரசாங்கமும் அப் பகுதி தங்களுடையதென்று விடுதலைப் புலிகளும் கூறிவரும்

(10ம் பக்கம் பார்க்க)

## கணித பாடத்தில் உயர் புள்ளி பெறுபவருக்கு புலமைப் பரிசில்

(கொழும்பு)

புதிய புலமைப்பரிசில் திட்டமொன்று நேற்று முன்தினம் கல்வியமைச்சினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்படி தெரிவு செய்யப்படும் 25 மாணவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு 2500 ரூபா வீதம் வழங்கப்படும்.

கடந்த வருடம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கணிதத்தில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் இம் மாணவர்களுக்கு இப் புலமைப்பரிசில் வழங்கப்படுமென அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதன்படி கணித பாடத்தில் உயர் புள்ளிகளைப் பெற்று, தொடர்ந்தும் க.பொ.த உயர் தரத்தில கணிதப்பிரிவில் கற்கின்ற பெருளாதார வசதி குறைந்த குடும்பத்தை சேர்ந்த மாணவர்களே, இப்புலமைப் பரிசிலை பெறத்தகுதியுடையவர்கள். இவர்கள் உயர் தரத்தில் பயிலும் 2வருடங்களும் இப் புலமைப் பரிசில் நிதியினைப் பெறுவார்கள்.

இதேவேளை இத்திட்டத்திற்கென தாம் ஏற்கனவே மாணவர்களைத் தெரிவு செய்து விட்டதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.(இ)

## இடைக்கால சபை திட்டவரைபு அயர்லாந்தில் நேற்றும் ஆராய்வு

### தூதுவர் எரிக் சோலும் பங்கு பற்றினார்

(டப்ளின்)

இலங்கை அரசிடம் சமர்ப்பிப்பதற்கான இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபு மூன்றாவது நாளான நேற்றும் அயர்லாந்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் சட்ட வல்லுநர்களால் ஆராயப்பட்டது. இதன்போது விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்மும் கலந்து கொண்டார்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு (அயர்லாந்து நேரம்) அயர்லாந்தின் நல்லிணக்கத்திற்கான கிளன் கிறி நிலையத்தில் ஆரம்பமான இக் கலந்துரையாடலில், சர்வதேச செயற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலிய நாட்டுப் பேராசிரியர் அன்ரனி

(10ம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் ஐ. நா சபை உரை முஸ்லிம் சமூகத்துக்கு எதிரானது

### பத்தேகம சமித்த தேரர் கண்டனம்

(கொழும்பு)

ஈராக் மீதான அமெரிக்க படையெடுப்பை ஐ.தே.முன்னணி அரசாங்கம் நியாயப்படுத்தியமையானது வெட்கக்கேடானது. இது 3ம் உலக நாடுகளின் மத்தியில் இலங்கையை ஒரு கீழ்த்தரமான நாடாக காண்பிக்கும் செயலென்று லங்கா சமசமாஜக் கட்சி கண்டித்துள்ளது. அத்துடன் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் எடுபிடியாக ஐ.தே.முன்னணி அரசாங்கம் செயற்படுவதாகவும் அக் கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசிய வண.பத்தேகம சமித்த தேரர் இது குறித்து தெரிவிக்கையில்; பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் உரை ஐ.நாவின் சீர்திருத்தங்களையே கேலிக்குரியதாக்கும் செயலாகும்.

சர்வதேச பொலிஸ்காரனாக செயற்படும் அமெரிக்கா ஏனைய

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளைக் கட்டுப்படுத்த கண்காணிப்புக்குழு தவறிவிட்டது

### ராஜபக்ஷ பாராளுமன்றில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தவறிவிட்டது.

நேற்றுக்காலை பாராளுமன்றத்தில் நடைபெற்ற நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான விவாதத்தின் போது எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இக் குற்றச்சாட்டினைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர் வடக்கு கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் தற்போது பாதுகாப்பற்ற சூழ்நிலை தோன்றியுள்ளது. அத்துடன் எவ்வித பந்தோபஸ்தும் அற்ற நாடாகவும் இலங்கை மாறியுள்ளது.

நாட்டின் இவ்வாறான அழிவு நிலைக்கு காரணகர்த்தாவாகவுள்ள விடுதலைப்புலிகளை ரணில் தலைமையிலான அரசு கட்டுப்படுத்தத் தவறியுள்ளது.

நாட்டின் முக்கிய நிலையமாக விளங்கும் திருகோணமலைத்துறை முகத்துககும் அங்குள்ள கடற்படைத் தளத்துக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

(தி-61)

## வீரமணி ஐயர் காலமானார்.



மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் நேற்று அதிகாலை காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 72.

(10ம் பக்கம் பார்க்க)

## குடும்ப உறுப்பினர்கள் மூவர் கடத்தப்பட்டு, தாக்கப்பட்டனர்

### உடுப்பிட்டியில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர், இனந்தெரியாதோரால் வான் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்டு, கடுமையாகத் தாக்கப்பட்டபின்னர் நேற்று அதிகாலை செம்மணி மயானப் பகுதியில் இறக்கிவிடப்பட்டுள்ளனர்.

உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த இவர்கள் நேற்று முன்தினம் கடத்தப்பட்டிருந்தனர்.

கடுமையாகத் தாக்கப்பட்டிருப்பதால் மூவரும் வல்வெட்டித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் உடுப்பிட்டிப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(இ-5)

# மறைந்த மஹாவித்துவானுக்கு அஞ்சலி

## இசை உலகின் கலங்கரை விளக்கு

### அமைச்சர் மகேஸ்வரன் இரங்கற் செய்தி

இணுவில் பிரம்மஸ்ரீ மகாவித்துவான் வீரமணி ஐயா அவர்கள் திடீர் மரணம் அடைந்தார் என்ற செய்தி கேட்டு பெரும் அதிர்ச்சி அடைந்தேன். தமிழர்களைப் பொறுத்தவரை அவர் கலங்கரை விளக்காகத் திகழ்ந்தார். தமிழில் பக்திப் பாடல்கள் பலவற்றை இயற்றி அவற்றுக்குத் தக்க இசையும் அமைத்து தமிழ் அன்னைக்குச் சமர்ப்பித்து பெரிய ஒரு சங்கீத மலையாகத் திகழ்ந்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள எத்தனையோ பெரிய கோவில்களில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் தெய்வங்களின் மேல் அவர் இயற்றிய பல கீர்த்தனைகளும் பல ஊஞ்சல்ப் பாட்டுகளும் என்றுமே சாகாவரம் பெற்றவை. திரு.வீரமணி ஐயா அவர்கள் ஒரு சக்தி உபாசகர். அவர் இயற்றி இசையமைத்த "கற்பகவல்லி" எனும் கீர்த்தனை என்றுமே அழியாதது. அவர் எத்தனையோ நூல்களை இயற்றி எத்தனையோ பட்டங்களைப் பெற்றுள்ளார். அவர் அண்மையில் 72 மேளகர்த்தா இராகங்களை சுர வரிசையாக அமைத்து பிரமாண்டமான நூலை இயற்றி மிகப்பெரிய சாதனை படைத்துள்ளார். அவரது மறைவு தமிழுக்கும் இசைக்கும் ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பாகும். அந்த மேதையின் திருவுருவம், எல்லோரது மனதிலும் நன்கு பதிந்த முகம், என்றுமே அழியாத சித்திரமாக இருக்குமென நான் நம்புகின்றேன். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

## முத்தமிழ் அறிஞரை இழந்து விட்டோம்

### கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி இரங்கற் செய்தி

ஆரொடு நோகோம் ஆர்க்கெடுத்து உரைப்போம்
ஐயாவின் மறைவு இம்மண்ணுக்குச் சோகம்
இயந்தமிழ் அன்னையும் இசைத்தமிழ்ப் பாவையும்
நடனத்தமிழின் நல்லறிவான்மையும்
கவிதையை இயற்றும் செம்மையும் கண்டோம்
முகத்தினில் தவழும் புன்னகையும் மாண்பும்
அகத்தினில் ஓங்கும் செவ்விய உணர்வும்
கண்டு மகிழ்ந்தனம் காலம் காலமாய்
எங்கே போனீர் எப்படி மறைந்தீர்
எமது மண்ணை இன்று கலங்க வைத்தீரே
ஐயா உங்கள் அசைந்த நடையும்
வாயில் தவழும் மெல்லிசை ஓசையும்
கேட்பது எப்போ வானவர் அழைப்பை-
நயந்துமே ஏற்று நடைகட்டி விட்டீர்
என்னதான் செய்வோம் இது தான் முடிவு
கரங்களைக் கூப்பி இதய அஞ்சலியை
உங்கள் ஆத்மாவுக்குச் சமர்ப்பணம் செய்வோம்.

## கலைக்காக வாழ்ந்த இசைமேதை

### யாழ்.பல்கலைக்கழக நடனத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராசா இரங்கல் செய்தி

வீரமணி ஐயாவின் இழப்பு தமிழ்க் கலையுலகம் சந்தித்திருக்கும் பதிலீடு இல்லாத பெரும் இழப்பாகும். இந்நாட்டில் இசையையும், பரத நடனத்தையும் உன்னதமான தரத்தை நோக்கி வளர்ப்பதற்கு அயராது உழைத்த கலைக்குருவாக அவர் விளங்கினார். அண்மையில் இலங்கைக்கு வந்த அடையார் இலட்சுமணன் அவர் இந்நாட்டின் பரத நடன வளர்ச்சியையும் தர உன்னதங்களையும் கண்டு பாராட்டிய வேளை அந்தப் பெரும் பணியில் ஒன்றிணைந்து உழைத்தவர்களுள் ஐயா அவர்களுக்கு தனித்துவமான இடம் உண்டு. கலைக்காக வாழ்தல், கலைஞர்களை ஊக்குவித்தல், கலை வாழ்க்கைக்கும், சமூக வாழ்க்கைக்குமிடையே வேறுபாடு காணாது இன்புறுதல் முதலாம் பணிகளை அகமும் புறமும் மலர ஐயா அவர்கள் மேற்கொண்டு வந்தார்கள் தமது குருவாகிய பாபநாசம் சிவன் அவர்களுக்குப் பின்னர் தமிழ் மொழியிலே பெருந்தொகையான தரமான கீர்த்தனைகளைப் பல்வேறு அபூர்வ இராகங்களிலே அமைத்துத் தந்த பெருமையும் ஐயாவுக்கு உரியது. தமிழில் நாட்டிய நாடகம் வளர்வதற்குரிய பலமான அடித்தளத்தை அமைத்துத் தந்த சிறப்பும் ஐயாவுக்கே உரியது. தமது குருவாகிய திருமதி ருக்மணி அம்மையாரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிப் பரத நடனத்தையும், நாட்டிய நாடகங்களையும் ஆழ்ந்த மரபுகளை அடியொற்றி வளர்த்த ஐயாவின் நினைவுகள் கலை உலகினால் மறக்கப்பட முடியாத பதிவுகளாகும்.

## இதய அஞ்சலி



இசை உலகில் அகல்
விளக்காய் விளங்கி
இணுவில் பதிக்கு
பெரும் புகழ்சேர்த்த
எங்கள்
மஹா வித்துவான்
பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் M.A.
அவர்களின் மறைவால் ஆழ்ந்த
கவலையடைவதோடு அவருக்கு
எமது இதய அஞ்சலியைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

அண்ணா தொழிற்சாலை
இணுவில்



'ஸாகித்ய ஸாகரம்', 'ஆசுகவி', 'ஸம்வாதிஸ்வரர்', 'அருட்கலை வாரிதி', 'ஸாகித்ய மாமணி', 'மதுர கவி', 'சிருஷ்டி ஞாயிறு', 'அருட்கவிச் செம்மல்', 'இயலிசை வாரிதி', 'கவிமாமணி', 'முத்தமிழ் வாரிதி', 'ஸாகித்ய சிரோன்மணி', 'முத்தமிழ வித்தகர்', 'ஞானக்கவிமணி', 'கலாரத்னா',

'கலாபூஷணம்'

**'மகாவித்துவான்'**

இணுவில்,

**பிரம்மஸ்ரீ**

**ந.வீரமணிஜயர் M.A**

(அகில இலங்கை சமாதானநீதவான்) முன்னாள் விரிவுரையாளர், அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்-பலாலி அதிதி விரிவுரையாளர்,இராமநாதன் நுண்கலைக் கழகம். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

## இசை உலகிற்கு பேரிழப்பு

### நல்லை ஆதீன முதல்வர் இரங்கற் செய்தி

இசை உலகின் மாமேதையாக விளங்கிய மகாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இசைத் துறையில் அவர் படைத்த சாதனைகளால் ஈழத் தமிழர்கள் இசை உலகில் உயர்வு பெற்றனர்.

இவ்வாறு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த அச் செய்தியில்,

இசைக் கலைஞர்களை உருவாக்கித் தந்த பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் இசைக்காகவே வாழ்ந்தவர். அவரின் அர்ப்பணிப்பை ஈழத் தமிழர்கள் ஒருபோதும் மறந்து விடமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மண்ணுக்குப் பெருமையளித்த இசைமாமணி பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர்

### புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகம் அனுதாபச் செய்தி

'இசைமாமணி' என்றும் 'இயல் இசைவாரிதி' என்றும் தமிழுலகம் போற்றிப்புகழ்ந்த பெருங் கலைவிற்பன்னரான பிரம்மஸ்ரீ. ந.வீரமணி ஐயர் அவர்களின் மறைவு எல்லோருக்குமே பேரிழப்பாகும். இவ்வாறு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் வெளியிட்ட அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது. அரை நூற்றாண்டு காலமாகத் தன்னுடைய புலமையாலும், இசைத் திறனாலும், ஆடற்கலையை அளித்த சிறப்பாலும் எங்கள் மண்ணைப் பெருமைப்படுத்தியவர் வீரமணிஐயர் அவர்கள். ஈழத்திலும், தமிழகத்திலும் இசையுலகுடன் பரிச்சயமுடைய எல்லோருக்குமே பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் என்றால் அபாரமான அவருடைய எல்லாத் திறன்களையும் தெரிந்திருக்கும்.

கர்நாடக சங்கீதத்தையும் பரதத்தையும் கற்றறிந்து, அதில் பரிசோதனைகள் பல செய்து, தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்தி பலரை வியப்படையச் செய்த சிறந்த ஒரு ஆளுமையாக வீரமணி ஐயர் எம்மோடிருந்தார். இவரை மெச்சிப் புகழாதார் எவருமேயில்லை. இந்தியாவின் புகழ்வாய்ந்த இசைமேதைகள் பலரும்கூட அவரைப் பாராட்டியிருக்கிறார்கள்; மெச்சியிருக்கிறார்கள். அவர்களால் யாழ்ப்பாணம் வீரமணி ஐயர் என்று அன்பாகவும்,மதிப்பாகவும் அன்னார் அழைக்கப்பட்டவர்; குறிப்பிடப்பட்டவர்.

வீரமணி ஐயர் அவர்கள் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் மீதும் எமது தலைமையின் மீதும் மிகுந்த மதிப்பையும் பற்றையும் கொண்டிருந்தார்.அதற்கொரு சான்றாக அவர் 'தமிழீழன்' என்ற பெயரிலே போராட்டத்திற்கு உத்வேகம் அளிக்கும் பொருட்டு பாடல்களையும், கவிதைகளையும், நாட்டிய நாடகங்களையும் ஆக்கி ஆளித்தார். எமது புலிகளின் குரல் வானொலியில் பல நிகழ்ச்சிகளைச் செய்து அளித்தார். விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்துடன் மிக நெருக்கமாக உறவுகொண்டு தன்னுடைய முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தார்.மிக நெருக்கமாக போராளிகளுடன் பழகுவதிலும், அன்பாக உறவாடுவதிலும், அவர்களுடைய பணிகளில் இணைந்திருப்பதிலும், பெருமையோடு தன்னை ஈடுபடுத்தியிருந்தார்.

இத்தகைய சிறப்புக்கும் பெருமைக்கும் மதிப்புக்கும் உரிய இசை மேதையை, கலை வல்லுனரை இன்று தமிழுலகம் இழந்து நிற்கின்றது. இசைமாமணியின் இழப்பால் துயர் உற்றிருக்கும் குடும்பத்தாருக்கு தமிழீழக் கலைஞர்களோடு எமது அமைப்பின் சார்பாக எம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விடுதலைக் கனவோடும் கலைத் தாகத்தோடும் இறுதிவரை உழைத்த 'இயல் இசை வாரிதிக்கு' எமது அஞ்சலி உரித்தாகட்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## இதய அஞ்சலி



தமிழுலகிற்கு பெரும் புகழ் ஈட்டித் தந்த
இசை மேதை மஹா வித்துவான்
பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் M.A
அவர்களுக்கு எமது உளம் நெகிழ்ந்த
அஞ்சலிகளைக் காணிக்கை
ஆக்குகின்றோம்

GANESAN CENTER
K.K.S. ROAD
INUVIL

## நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலி



இசையால் வசமாக்கி, தமிழ் இதயங்களை
இன்புற வைத்த
இசை மாமணி இணுவிலூர்
**பிரம்மஸ்ரீ. வீரமணி ஐயர் M.A**
அவர்களுக்கு எமது இதயம் நெகிழ்ந்த
அஞ்சலிகள்

லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை
இணுவில்

## சிறு விளம்பரம்


### வீடு வாடகைக்கு தேவை

5 பேர் கொண்ட குடும்பத்திற்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு யாழ். மாநகர சபை எல்லைக்குள் (நல்லூரை அண்டிய பகுதி விரும் பத்தக்கது) வாடகைக்குத் தேவை. நியாயமான வாடகை, முற்பணம் வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்:- T.P. 0777 118 780

(7707)


## மர நடுகை வேலைத்திட்டம்


(யாழ்ப்பாணம்)

வறுமை ஒழிப்பு வாரத்தை முன் னிட்டு மரநடுகை வேலைத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளது.

சமுர்த்தி அதிகார சபையின் விவ சாய அபிவிருத்திப் பிரிவினரால் எதிர்வரும் 17ஆம்திகதி முதல் 23ஆம் திகதிவரை யாழ்.மாவட்டத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலை களில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதற்கான முன்னேற்பாடுகளில் சமுர்த்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலகம் ஈடுபட்டுவருகின் றது. (உ-4)

## நாங்கள் கொல்லத்தான் வந்தவர்கள் இராணுவம்




# ஒரு இலட்சம் பார்வையற்றோர் இலங்கையில் உள்ளனர்

(கொழும்பு)

உலகம் முழுவதிலும் 180 மில் லியன் பார்வையற்றோர் உள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இலங் கையில் மட்டும் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பார்வையற்றோர் உள்ள னர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உலகம் முழுவதிலும் உள்ள 45 மில்லியன் மக்கள் இன்னொரு வரின் உதவியின்றி நடக்க முடி யாதுள்ளனர். இவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் தென்கிழக்காசி யாவைச் சேர்ந்தவர்கள். இதன்படி ஒவ்வொரு 5 செக்கன்களிலும் ஒவ வொருவர் பார்வை இழக்கின்றனர். இவர்களில் 80 வீதமானோர் முதிய வாகள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பார்வைக் கோளாறிற்கு காரண மாக பெரும் பாலும் ''கற்றாக்'' என்னும் நோய் அமைவது தற் போது கண்டறியப்பட்டுள்ளது.

15 வீதமான பார்வைக் கோளாறு ''ரக்கனோமா'' என்னும் நோயி னால் ஏற்படுகிறது.

இன்று உலகம் முழுவதிலும் பார்வையற்ற சிறுவர்கள் 1.5 மில் லியன் பேர் உள்ளனர்.

இலங்கையில் மட்டும் 2ஆயிரத்து 500 சிறுவர்கள் பார்வையற்றுள்ளனர். (உ-6)

# பாதகமான அரசியல் போக்கு வளர்வதை மக்கள் இயக்கங்கள் தடுத்து நிறுத்த வேண்டும்

## புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு 20 மாதங்கள் ஆகின்றன.தற்போது யுத்த நிறுத்தமும் சமாதானச் சூழ லும் நிலவுகின்றபோதிலும் இதுவே நிரந்தரமென்று கூறிவிட முடியாது.

அதேவேளை, அரசியல் தீர்வுக் கான பேச்சுவார்த்தையும் அதற்கு முன்னோடியான இடைக்கால நிர் வாகக்கட்டமைப்பு என்ற விடயமும் முடிவுக்கு வரமுடியாதவாறு இழுபட் டுகொண்டே செல்கிறது. இந்நிலை யில், தென்னிலங்கையின் அரசியல் பொருளாதார நெருக்கடிகள் மேலெ ழுந்து வளர்ந்த வண்ணமே இருக் கின்றன.

இவற்றின் நாளாந்த போக்கு தெற்கின் பேரினவாத சக்திகளால் திசை திருப்பப்பட்டு அரசியல் தீர்வுக்கான சமாதான முயற்சிகளை சிதறடிப்பதற்குப் பயன்படுத்தப் படக்கூடிய அபாய நிலை தெற் கிலே காணப்படுகின்றது. இத் தகைய பாதகமான அரசியல் போக்கு வளர்வதை அரசியல் தீர்வையும், சமாதானத்தையும் வேண்டிநிற்கும் அனைத்துச் சக்திகளும் தடுத்து நிறுத்தக்கூடிய மக்கள் இயக்கங் களை முன்னெடுக்கவேண்டும்.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல், யாழ்ப்பாணத் தில் உள்ள கட்சிப் பணிமனையில் இடம்பெற்ற ''இன்றைய அரசியல் நிலையும் வளர்ந்து வரும் நெருக் கடிகளும'' என்னும் தலைப்பிலான கலந்துரையாடலில் உரையாற்றும் போது கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற் றுகையில்,

தெற்கில் நான்கு நிலைப்பட்ட நெருக்கடிகள் முன்தள்ளப்பட்டு வருகின்றன. ஒன்று பொருளாதாரப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்ட சம்பள உயர்வு உட்பட பல முக்கிய கோரிக்கைகளை உள்ளடக்கிய தொழிற்சங்க வேலை நிறுத்தப் போராட்டங்கள் ஒன்றன் பின் ஒன்றாக இடம்பெற்று வருகின்றன. இவற்றுடன் கூடவே தனியார் மயப்படுத்தலை எதிர்த்த பகிஷ்கரிப்பு, மறியல் போராட்டங் களும் பல்கலைக்கழக மாணவர் களது எதிர்ப்பு பகிஷ்கரிப்புகளும் இடம்பெறுகின்றன.

இரண்டாவது , ஜனாதிபதிக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையிலான அதிகார இழுபறிகளும் போட்டியும் முறுகல் நிலைக்குச் சென்று அரசியல் அமைப்பு நெருக்கடியாக மாறி வருகின்றது.

மூன்றாவது, பேரினவாதத்தை அப்பட்டமாகவே கையேற்று முன்னெடுதது வரும் ஜே.வி.பி.யும் ஏனைய சிங்கள பௌத்த அமைப்பு களும் இனவாத விஷத்தை பாதயாத் திரைகள் மூலம் சிங்கள மக்களி டையே ஊட்டி வருகின்றன.

அதன் மூலம் சமாதானம் அரசி யல் தீர்வு முயற்சிகளுக்கும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப் வழங்கப்படுவதற்கும் கடும் எதிர்ப் பைத் தெரிவித்தும் வருகின்றன.

நான்காவது, அந்நிய அயல் தேச மேலாதிக்க சக்திகள் தத் தமது பொருளாதார, அரசியல் இராணுவ ஆதிக்கங்களை நிலை நிறுத்துவதற்காக திரை மறைவி லும நேரடியாகவும் போட்டியிட்டு தலையீடுகள் குறுக்கீடுகள் செய் தும் வருகின்றன.

மேற்கூறப்பட்ட நான்கு அம்சங் களின் வளர்ச்சிப்போக்கானது பாதகமான வழிகளில் திசை திருப்பப்பட்டு நாட்டின் பிரதான பிரச் சினையான தேசிய இனப்பிரச் சினைக்கு அரசியல் தீர்வு காணப் படுவதைத் தடுத்து சீர்குலைவுக்கு உள்ளாக்கப்படக்கூடிய அபாயத்தை நோக்கியே நகர்வதை உணர முடி கின்றது.

இதன் விளைவுகள் மீண்டும் யுத்தம் வெடித்து விடுமோ என்னும் பேரச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியும் வருகின்றது. எனவே தொடர்ந்தும் அரசியல் தீர்வை வற்புறுத்தியும் சமாதானத்திற்கான அரசியல் தீர்வைக் காண்பதையும் அதற்கு முன்னோடியான இடைக் கால நிர்வாகக் கட்டமைப்பை வழங்க முன்வரல் வேண்டும் என் பதையும் மக்கள் இயக்கங்கள் மூலம வலியுறுத்தல் வேண்டும். இவ் விடயத்தில் அரசாங்கம் பின்வாங் காது துணிவுடன் செயற்படவேண் டும் என வற்புறுத்தல் செய்ய சகல சக்திகளும் முன்நிற்க வேண்டும் (உ)

# பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனை படிப்படியாக குறைக்கப்படும்

## சுற்றாடல் அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையைக் குறைப்பதற்கு சுற் றாடல் இயற்கை வள அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை,இத்தகைய பொருட் களின் பாவனையால் சுற்றாடலிற்கு பெரும்பாதிப்பு ஏற்பட்டுவருவதால் ஏற்கனவே இது தொடர்பாக அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுற்றாடல் இயற்கை வள பிரதி அமைச்சர் இந் திக்க பண்டார நாயக்கா தெரிவித் துள்ளார்.

பொலித்தீன்,பிளாஸ்ரிக் ஆகிய பொருட்களின் பாவனையைக் குறைத்து அவற்றை மீள் உற் பத்திக்கு பயன்படுத்தும் முயற்சி யில் அமைச்சு ஈடுபட்டு வருகின் றது.

இதேசமயம்,பொலித்தீன் பாவனை யைக்குறைப்பதற்கான திட்டம் முதலில் அரசாங்க திணைக்களங் களில் ஆரம்பிக்கப்படும்.

பின்னர் படிப்படியாக ஏனைய துறைகளுக்கு விஸ்தரிக்கப்பட்டு மாற்றுப் பொருட்களின் பாவனை ஊக்குவிக்கப்படும்.

அத்துடன்,பொலித்தீன் பாவனை யால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து விளக்கும் விழிப்புணர்வுத் திட்டமும் நாடு பூராவும் அமுல் படுத்தப்படவிருக்கின்றதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-60.10)






வட்டுக்கோட்டையில் புதிதாக அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தை,யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் கரல்ற் அந்தனி வைபவ ரீதியாகத் திறந்துவைப்பதையும்,அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்வதையும் படங்களில் காண லாம். (படங்கள் வட்டு. அஜித்)

# சமாதான முயற்சிகள் என்ற பெயரால் தேசிய பாதுகாப்பை உதாசீனம் செய்கிறார்

## பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் ஜனாதிபதி பாய்ச்சல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் விருப்பு வெறுப்புகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடிபணிந்து நடந்து கொள்வதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றஞ்சாட் டியுள்ளார்.

இவ்வாறு கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள 11 பக்கங்கள் கொண்ட கடிதத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள் ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப் பிடப்பட்டிருப்பதாவது, நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் உரிய உரிமைகளை வழங்கும் உண்மை யான சமாதானத்தையே மக்கள் விரும்புகின்றனர். ஆனால், இந்த விடயத்தில் ஐக்கியதேசிய முன் னணி அரசாங்கம் தோல்வியைத் தழுவிவிட்டது.

பிரதமர் ரணில் தனக்கும், தனது கட்சிக்கும் எது நல்லது எனக் கருதிச் செயற்படாமல், நாட்டுக்கு எது சிறந்தது என்பதைப் புரிந்து கொண்டு செயலாற்றினால் அதற் கான ஆலோசனைகளையும் ஒத் துழைப்புகளையும் வழங்கத் தயா ராகவுள்ளேன்.

அத்துடன், பாராளுமன்ற அதி காரத்தை தன்னிடத்தே வைத்துக் கொள்ளும் எண்ணங்களைக் கை விட்டு, நாட்டைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லும் வழிவகை கள் குறித்து ஆராய்ந்தால் அதற் கான ஒத்துழைப்புகளை வழங்க வும் தயாராகவுள்ளேன்.

மேலும், திருகோணமலை கடற் படைத் தளத்துக்கும், துறைமுகத் துக்கும் தமிழீழ விடுதலைப் புலி களினால் பெரும் அச்சுறுத்தல் ஏற் பட்டுள்ளது.

பாதுகாப்பு விடயங்கள் குறித்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கடந்தமாதம் அனுப்பி வைத்துளள கடிதங்கள் இரண்டிலும குறிப்பிட்டிருந்தேன். ஆனால், அதற்குரிய பொருத்தமான பதிலை பிரதமர் அனுப்பவில்லை. மாறாக அனுப்பிவைத்துள்ள பதில் கடிதங் களில் நழுவல் போக்குகளே காணப் பட்டன.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத் தல் விடுக்கப்பட்டிருந்த போதும், அதனைத் திசை திருப்பும் வகை யிலேயே பிரதமரால் இக்கடிதங்கள் எழுதப்பட்டன.

சமாதான முயற்சிகள் ஏன்ற பெய ரால் தேசிய பாதுகாப்புச் சம்பந்தப் பட்ட விடயங்களை பிரதமர் உதாசீ னம் செய்வது அவரது நடவடிக் கைகளில் இருந்து தெளிவாகியுள் ளது என அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தி-61)

# 10 ஆயிரம் படையினரை ஈராக்கிற்கு அனுப்ப

# துருக்கி நாடாளுமன்றம் சம்மதம்

(வாஷிங்டன்)

அமெரிககாவின் வேண்டுகோளுக்கு இணங்க ஈராக்கின் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதில் உதவுவதற்காக 10 ஆயிரம் துருப்புக்கள் வரை அனுப் பலாம் என்ற துருக்கி அரசின் யோசனைக்கு அந்த நாட்டு நாடா ளுமன்றம் ஒப்புதல் அளித்துவிட்டது.

நாடாளுமன்றத்தில் இது குறித்து விவாதம் 2.30 மணி நேரம் நடை பெற்ற பின்னர் வாக்கெடுப்பு நடை பெற்றது.

துருப்புக்களை அனுப்புவதற்கு ஆதரவாக 358 வாக்குகளும், எதி ராக 183 வாக்குகளும் பதிவாகின.

அதற்கு சற்று முன்பு தான் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தும் வகையில், அண்டை நாடுகளின் படை வீரர்களைச் சேர்ப்பதற்கு, எதிர்ப்புத் தெரிவிப்பதாக ஈராக்கிய நிர்வாக சபை உறுப்பினர்கள் சிலர் கூறியிருந்தார்கள்.

ஈராக்கில் ஆளும் பேரவையை அமெரிக்கா நியமித்துள்ள போதிலும், துருக்கி இராணுவத்தை அனுமதிப் பது குறித்து ஈராக்கிய மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு ஆளும் பேரவை சிரமத்தை எதிர்நோக்கும் என்று கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் இந்த விடயத் தில் ஆளும் பேரவைக்கு தலைமை வகிக்கும், அமெரிக்க ஆளுநர் போல பிறேமர் இறுதித் தீர்மானம் எடுப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.(பி-9)

## இராணுவ அதிகாரி கொல்லப்பட்டார்

(புதுடில்லி)

அருணாச்சலப் பிரதேசத்தில் ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்று வழிமறித்து தாக்கியதில் இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார்.

எல்லைச் சாலைகள் அமைப் பின் அதிரடிப் படையின் கொமாண் டர் மேஜர் ஆலூக்மாத்தூர் இந்தத் தாககுதலில் மோசமாகக் காயமடைந்து மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை நடந்தபோது உயிரிழந்தார்.

அவரும் வேறு 4 ஊழியர்களும் சம்பளம் வழங்குவதற்காக பணம் எடுத்துச் சென்றபோது அவர்களு டைய காரின் மீது இந்தத் தாக்கு தல் நடத்தப்பட்டது. (பி-9)

# எந்த அணு ஆயுதத் தாக்குதலுக்கும் இந்தியா தயாராகவுள்ளது

## ஜோர்ஜ் பெர்னாண்டஸ்

அணு ஆயுத அச்சுறுத்தல் எந்த நாட்டில் இருந்துவந்தாலும் அதனை எதிர்கொள்ள இந்தியா தயாராகவே உள்ளது எனப் பாதுகாப்பு அமைச் சர் ஜோர்ஜ் பெர்னாண்டர்ஸ் கூறி னார்.

பஹார் தலைநகர் பாட்னா வந்த அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், ஜெயப்பிரகாஸ் நாராயண் சர்வதேச விமான நிலையத்தில் செய்தியாளர் களிடம் பேசுகையில், அணுவாயுத அச்சுறுத்தலைச் சந்திப்பதற்கு எவ்வாறு இந்தியா தயார்நிலையில் உள்ளது என்கின்ற தகவல்களைத் தேசத்தின் பாதுகாப்புக் கருதி தன் னால் கூற இயலாது என்று தெரி வித்தார்.

பாகிஸ்தானிடம் இருந்து வந்துள்ள மிரட்டல் குறித்தும், அணு ஆயுதத்தைத் தாங்கிச் சென்று தாக்க வல்ல காஸ்னவி ஏவுகணையை அந்நாடு சோதித்திருப்பதையும் செய் தியாளர்கள் சுட்டிக்காட்டியதற்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் பெர்னாண்டஸ், பாகிஸ்தானிடம் இருந்து இந்தியாவிற்கு எந்த அச் சுறுத்தலும் தற்பொழுது இல்லை என்றும், அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டாலும் அதனைச் சந்திக்க வல்ல சோதனைகளை இந்தியா வும் நடத்தி வருகின்றது என்றும் பதிலளித்தார்.

அணு ஆயுத கட்டளைத் தலைமை நிறுவப்பட்டது குறித்தும், அணு ஆயுத ஏவுகணைகள் தயார் நிலை யில் வைக்கப்பட்டுள்ளது குறித்தும் ஏற்கனவே தான் அறிவித்து அவை செய்தித் தாள்களில் வந்துவிட்ட நிலையில் மீண்டும் ஒருமுறை அது பற்றி விளக்கவிரும்பவில்லை என்று பெர்னாண்டஸ் கூறினார்.

இந்திய இராணுவத்தை நவீன மயமாக்க மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் தாமதித்து வரு வதை ஒப்புக்கொண்ட அமைச்சர் பெர்னாண்டஸ் அதற்குக் காரணம் தனது துறையின் மெத்தனப் போக்கு அல்ல என்று கூறினார். சுக்கோய் போர் விமானம் வாங்குவதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட உட னேயே அதற்கான விற்பனைத் தொகை முழுவதும் அளிக்கப்பட்டு விட்டது என்றும், அவ்வாறு இருந் தும் சில நடைமுறை,ச் சிக்கல்கள் காரணமாகக் குறித்த நேரத்தில் அவைகள் கிட்டவில்லை என்றும் பெர்னாண்டஸ் கூறினார். (பி)



இந்திய விமானப்படையின் 71–வது ஆண்டு விழா நாளை டெல்லியில் கொண்டாடப்பட உள்ளது. இந்த நிகழ்ச்சியில் இந்திய விமானப் படையைச் சேர்ந்த 43 வகை போர் விமானங்கள் பங்கேற்க உள்ளன. முன்னதாக பாலம் விமான நிலையத்தில் எஸ்.யு.–30 ரக போர் விமானததின் பின்னணியில் அணிவகுப்பு ஒததிகையில் ஈடுபட்டுள்ள விமானப் படை வீரர்கள்.

# பாகிஸ்தானில் 85 தீவிரவாத முகாம்கள் உள்ளனவாம்

(புதுடில்லி)

முஸ்லிம் பிரிவினைவாதப் போராளிகளுக்குப் பயிற்சி அளிப் பதற்காக, பாகிஸ்தான் 85 முகாம் களை நடத்திவருவதாக இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார்.

இந்த முகாம்களில் பயிற்சி பெறு கின்ற போராளிகள் இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் பகு தியில் தாக்குதல் நடத்த அனுப்பி வைக்கப்படுவதாகவும் அவர் கூறி யுள்ளார்.

இந்திய, பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் இடம்பெற்ற மோதலின் போது பாகிஸ்தானியப் பிரஜை ஒரு வர் கைதுசெய்யப்பட்டதன் மூலமாக, இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் எல்லை தாண்டிய பயங்கரவாதத் தைப் பாகிஸ்தான் தொடர்ந்தும் ஊக்குவித்து வருவதாக பெயர் குறிப்பிடவிரும்பாத அந்த இராணுவ அதிகாரி குற்றம் சாட்டினார்.

எவ்வாறாயினும், தமது நாட்டில் முஸ்லிம் பிரிவினைவாதப் போராளி களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடிய முகாம்கள் எதுவும் இல்லை என வும் காஷ்மீர் விடுதலைப் போராட் டத்தில் ஈடுபட்டு வருகின்ற முஸ்லிம் களுக்கு இராஜதந்திர மட்டத்திலான ஆதரவு வழங்கப்படுவதாகவும் பாகிஸ் தான் தெரிவித்துள்ளது.

(பி-9)

## திருப்பதி குண்டுத் தாக்குதல்

# திட்டமிட்டவர்களின் அடையாளம் தெரிந்துவிட்டது

(சென்னை)

திருபபதி திருமலைப் பாதையில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயு டுவைத் தீர்த்துக்கட்ட கண்ணிவெடித் தாக்குதலைத் திட்டமிட்டு நடத்திய நக்ஸலைட்டுகள் யார்யார் என்பது தெரிந்துவிட்டது.

ஆந்திராவின் பல மாவட்டங் களில் வலிமையாக இயங்கிவரும் தடைசெய்யப்பட்ட மக்கள் யுத்தக் குழுவைச் சேர்ந்த நக்ஸலைட்டுகள் 6 பேர் இந்த சதித்திட்டத்தைத் தீட்டித் தாக்குதல் நடத்தியதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என ஆந்திர மாநில காவல்துறையின் மூத்த அதி காரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த ஆறுபேரும் மக்கள் யுத் தக் குழுவின் மூத்த தலைவனான பி.சுதாகர் ரெட்டி என்பவன் தீட்டித் தந்த சதித்திட்டத்தைச் செயல்படுத் தியுள்ளார்கள் என்றும், அவர்களுக்கு எதிரான முக்கிய ஆதாரங்கள் தங் களுக்குக் கிடைத்துள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

கிளைமோர் எனும் சாதாரண மாகத் தயாரிக்கக்கூடிய ஆனால், சக்திவாய்ந்த கண்ணிவெடியைத் துல்லியமாக இயக்க மக்கள் யுத் தக் குழுவின் பல்வேறு பிரிவுகளில் உள்ள தேர்ந்த நக்ஸலைட்டுகளைத் தேர்ந்தெடுத்து இச்சதித்திட்டம் நிறை வேற்றப்பட்டுள்ளதாக அந்த அதி காரி கூறினார்.

இந்த 6 நக்ஸலைட்டுகளும் 20 முதல் 25 வயதிற்குட்பட்டவர்கள் என்றும், அவர்கள் எந்த நேரத் திலும் பிடிபடலாம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (பி)

# மிக உயர்ந்த மலைகளை 20 தடவைகள் ஏறி சாதனை

உலகின் மிக உயர்ந்த மலை களை 20 முறை ஏறி சாதனை படைததுள்ளார் ஸ்பெயினைச் சேர்ந்த யுவான் ஒய்யார்ஜபால்.


திபெத்திலுள்ள 8 ஆயிரம் மீற் றர் உயரம் கொண்ட சோ ஒயியு மலையை கடந்த ஞாயிற்றுக்கிழமை 4ஆவது முறையாக எட்டினார் ஒய் யார் ஜபால். மொத்தத்தில் இது அவருக்கு 20 ஆவது சாதனை மலையேற்றம்.

மோசமான பனியில், கால்களும் கைகளும் மூக்கும் உறைந்த நிலை யில் இச்சாதனையை நிகழ்த்திய ஒய்யார் ஜபால் நான்தான் மலை களின் ராஜா என்று வானொலி நிலையத்திற்கு அளித்த பேட்டியில் பெருமையுடன் கூறினார்.

இதற்கு முன் ஷெர்பா ஆங் ரீட்டா 8 ஆயிரம் மீற்றர் உயர முள்ள மலைகளைப் 19 முறை எட் டிப்பிடிததிருந்ததே இதுவரை சாதனை யாக இருந்தது. (பி)



சென்னை ஐ.ஐ.டியில் இந்திய தேசிய ரோபாட் ஒலிம்பியாட் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் 13 பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள், தாங்கள் வடிவமைதத நடக்கும் சிறிய ரோபோககளை டெஸ்ட் டிராக்கில் இயக்கி திறனை வெளிப்படுத தினர். போட்டியில் பங்கேற் ற ஒரு பள்ளி மாணவர்கள் அவர்களது படைப்புடன் .



கடலில் செல்லும் கப்பல்களையே தாக்கி சேதப்படுததும் சக்தி கொண்ட திமிங்கிலங்கள் தான் மாலுமிகளின் மிகப்பெரிய சவால். அதுபோன்ற மிகப் பெரிய திமிங்கிலம் ஒன்று தண்ணீரில் குதிததுச் செல்லும் காட்சி இது.

உலக தரிசனம்

# கொங்கோ மனிதப்படுகொலைகள் பற்றி விசாரிக்க விசேட படைக்குழு செல்கிறது

## சிறப்புப்படைப் பிரிவும் அனுப்பப்படும்

(நியூயோர்க்)

கொங்கோவில் இடம்பெற்ற மனி தப் படுகொலைகள் தொடர்பான விசாரணைகளை நடாத்துவதற்காக ஐக்கிய நாடுகள் விசேட படைக்குழு ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

கொங்கோவில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளில் 55 பொதுமக்கள் படுகொலைசெய்யப் பட்டதை அடுத்து, 3 ஹெலிகப்டர் களில் ஐக்கிய நாடுகள் படையி னர் அங்கு அனுப்பப்பட்டுள்ளதோடு, சிறப் புப் படையினரும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக ஐ.நா.சிரேஷ்ட அதி காரி ஒருவர் தெரிவித்தார்.

கொங்கோவின் பின்தங்கிய கிராம மான ஹெமாவில் இடம்பெற்று வரு கின்ற இன வன்முறைகளைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு இந்தப் படையி னர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(பி-9)

### இங்கிலாந்து கிரிக்கெற் அணி

# பயிற்றுநரின் பதவிக்காலம் காலவரையறையற்று நீடிப்பு

இங்கிலாந்து கிரிக்கெற் அணியின் பயிற்றுநர் பதவியைத் தொடர்ந்தும் வகிப்பதற்கான உடன்படிக்கையில் டங்கன் பிளைச்சர் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டுள்ளார். இந்த உடன்படிக்கையானது காலவரையறையற்றது என இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

1999 ஆம் ஆண்டு இங்கிலாந்துக் கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் பதவியை பொறுப்பேற்றுக் கொணட பிளைச்சரின் பதவிக் காலம அடுத்த ஆண்டுடன் நிறைவுக்கு வரவிருந்தது. எனினும், இப்போது கைச்சாத்திடப்பட்டுள்ள புதிய ஒப்பந்தத்தின் மூலம் டங்கன் பிளைச்சரின் பதவிக்காலம் எப்போது முடியும் என்பது அறிவிக்கப்படவில்லை.

இங்கிலாந்துக் கிரிக்கெட் அணி 1999ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலையை விடத் தற்போது சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. இறுதியாக நடைபெற்று முடிந்த தென்னாபிரிக்க அணியுடனான டெஸ்ட் போட்டித் தொடரைத் தோல்வியின் விளிமபில் இருந்து சமநிலை செய்து கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக பிளைச்சரின் பயிற்றுநர் சேவை தொடர்ந்தும் இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்குத் தேவை என்பதை உணர்ந்து இங்கலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இந்த முடிவை எடுத்து அவருடன் புதிய ஒப்பந்தத்தினை கைச்சாத்திட்டுள்ளதாகச் சபையின் பேச்சாளர் மேலும் தெரிவித்திருந்தார். (உ-68)




# வெற்றிக்கு வழிவகுத்த பாகிஸ்தான் இளம் புயல்கள்

தென்னாபிரிக்க அணிக்கெதிராக பாகிஸ்தான் லாகூர் விளையாட்டரங்கில் நடைபெற்ற 2வது டெஸ்ட் போட்டியில் 42 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றுள்ளது.

இதன் மூலம் இவ்விரு அணிகளுக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச போடடித் தொடரில் பாகிஸ்தான் அணி 2:0என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னணியில் திகழ்கிறது.

பாகிஸ்தான் அணியின் இந்த வெற்றிக்கு இளம் பந்துவீச்சாளர்களான முகமட் சமியும், முகமட ஹாபிசும் முக்கிய பங்கு வகித்தனர்.

போட்டியில் முதலில் துடுப்பெடுததாடிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50ஓவர் முடிவில் 7விக்கெற்றுக்களை இழந்து 267 ஓடடங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் பாகிஸ்தான் அணி சார்பாக துடுப்பெடுத்தாடிய சொயிப் மலீக்45 ஓட்டங்களையும் யூசுப் யொஹானா 65 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க வீரரான எம். திற்னி 46 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. இதில் தென்னாபிரிக்க அணி சார்பாக துடுப்பாட்டத்தில் போயிற்றாரிப்பென்னர் 58 ஓட்டங்களையும், ஜக்கலீஸ் 42ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக முகமட்சமி 20ஓட்டங்களுக்கு 3 விக்கெற்றுக்களையும், முகமட் ஹாபிஸ் 37 ஓட்டங்களுக்கு 3விக்கெறறுக்களையும் கைப்பற்றி பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றியிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

## உதைபந்தாட்டப் பயிற்சி

(மருதங்கேணி)

13 வயதுக்குட்பட்ட பாடசாலை சிறுவர்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சி ஒன்று கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

ஆசிய ஜேர்மன் விளையாட்டு பரிவர்த்தனைத் திடட்டம் தமிழீழ விளையாட்டுத் துறையுடன் இணைந்து நடாத்தும் இப் பயிற்சி முகாமிற்கு வெளிநாட்டில் இருந்து 4பயிற்றுநர்கள் வருகைத்தந்துள்ளனர்.

ஜேர்மன்னைச் சேர்ந்த ஏ.ரொபியாஸ், இத்தாலியைச் சேர்ந்த ஹட்றியல் ஆகியோரும் ஜேர்மனைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரியைகளான பறியட், அன்ஜா ஆகியோரும் மேற்படி நான்கு பேர் கொண்ட குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (உ-35)

## பாதமூட்டு உபாதையால் கிளைன் மக்ராத்திற்கு பாதிப்பு

சிம்பாவே அணிக்கெதிரான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் கிளைன் மக்ராத் விளையாட மாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடது கணுக்களின் பாத மூட்டுக்களில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக இவர் இந்த இரு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாட மாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அடுத்தமாதம் இந்தியாவில் இடம்பெற விருக்கின்ற ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளிலும் கிளைன் மக்ராத் விளையாட முடியாத நிலை பெரும்பாலும் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் காரணமாக அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளரான பிரட் வில்லியம்ஸ், கிளைன் மக்ராத்திற்கு பதிலாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

எனினும், இவ் வருடம் டிசம்பரில் இடம்பெறவுள்ள இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் கிளைன் மக்ராத் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.(உ-68)

## சார்ஜா போட்டித் தொடர் தென்னாபிரிக்க பாக். அணிகள் பங்கேற்பது உறுதிசெய்யப்பட்டது

சார்ஜாவில் அடுத்த வருடம் இடம்பெறவிருக்கின்ற முக்கோண ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் தொன்னாபிரிக்க மற்றும் பாகிஸ்தான் அணிகள் விளையாடுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் விளையாடுவதை இந்த இரண்டு நாட்டு கிரிக்கெற் அணிகளும் உறுதிப்படுத்தியிருப்பதாக சார்ஜா கிரிக்கெற் போட்டித் தொடருக்கான ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதில் விளையாடும் மூன்றாவது அணியுடனான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான ஆயத்தங்கள் இடம்பெற்று வருவதாக சார்ஜா போட்டித்தொடரின் பிரதம நிறைவேற்று அதிகாரி சாயிட் நூர்ராணி தெரிவித்துள்ளார். சர்வதேச கிரிக்கெற் போட்டிகளின் நேர அட்டவணை காரணமாக இவ் விளையாட்டுப் போட்டித்தொடரில் மற்றைய ஓர் அணியை காரணமாக ஒப்பந்தம் செய்வதில் சிரமங்கள் நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும், மிகவிரைவில் மூன்றாவது அணியுடன் கலந்தாலோசித்து இந்தப் போட்டித் தொடரில் விளையாடுவதற்கான ஒப்பந்தம் செய்யப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-68)

# விரைவில் ஓய்வு பெறப்போகும் ஆஸி. அணித்தலைவர் ஸ்ரீவ்வோ

கிரிக்கெற் துறையில் இருந்து தான் ஓய்வுபெறும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெற் அணித் தலைவர் ஸ்ரீவ்வோ வெளியிட்டுள்ளார்.அவுஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள கிரிக்கெற் பருவகாலமானது தாயகத்தில் தனது கடைசி கிரிக்கெற் பருவகாலமாக அமையுமெனவும் ஸ்ரீவ்வோ கூறியுள்ளார்.

ஓய்வு பெறுவதற்கு முன்னர் தாயகத்தில் நடைபெறவுள்ள இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் போட்டித் தொடரை வெல்வதே தனது குறிக்கோளாக இருப்பதாகவும் ஸ்ரீவ்வோ கருத்து வெளியிட்டுள்ளார். 38 வயதுடைய ஸ்ரீவ்வோ இதுவரை 163 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தான் கிரிக்கெற் துறையில் இருந்து ஓய்வு பெறவுள்ளமையை உயாவாக எண்ணுவதாக கருத்து வெளியிட்டுள்ள ஸ்ரீவ்வோ, நடப்பு பருவ காலத்தில் இடம்பெறவுள்ள அவுஸ்திரேலிய, சிம்பாவே அணிகளுக கிடையிலான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் அதனைத் தொடர்ந்து வரும் பருவகாலத்தல் இந்திய அணியுடன் 4டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெற் அணி போட்டிகளில் பங்கேற்கவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

## இலங்கை மெய்வல்லுனர் துறையினர் கடந்தவாரம் சந்திப்பு

இலங்கையின் மெய்வல்லுனர் துறையின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆராயும் விசேட சந்திப் பொன்று கடந்தவாரம் இலங்கை தேசிய விளையாட்டு விஞ்ஞானத் துறை நிறுவனத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், கடும் வாக்கு வாதங்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் மெல்வல்லுநர் சங்கத் தலைவர் சுனில் ஜெயவீரவின் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தற்போதைய மற்றும் முன்னாள் விளையாட்டுத் துறை சார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இலங்கை மெய்வல்லுனர் துறையுடன் தொடர்புடைய முன்னணி வீர, வீராங்கனைகளும் இச்சந்திப்பில கலந்து கொண்டதுடன், விளையாட்டு செயற்பாடுகளில் ஈடுபடும் போது தாங்கள் நடைமுறையில் எதிர் நோக்கும் பிரச்சினைகளையும, தீர்வுகளையும் அதற்கான யோசனை களையும் முன்வைதது்ள்ளனர்.

(தி-68)

## இங்கிலாந்துடன் இணைந்து விளையாட ரிக்கி பொண்டிங் இணக்கம்

அவுஸ்திரேலிய ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் இங்கிலாந்தின் பிராாந்திய அணிகளில் ஒன்றான சொமசெற் கழக அணிக்காக அடுத்த ஆண்டு முதல் விளையாடுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

ரிக்கி பொண்டிங் அடுத்த ஆண்டு யூலை மாதம் முதல் ஓகஸ்ட் மாத முடிவுவரை மாத்திரமே இங்கிலாந்தின் பிராந்திய அணிக்காக விளையாடக் கூடியதாக இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனெனில் அக்காலப்பகுதிவரை மாத்திரமே அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணி, போட்டிகள் எதிலும் பங்குபற்றாது இருக்கும் காலப்பகுதியாக இருக்குமென்று ரிக்கி பொணடிங் தெரிவித்துள்ளார்.

(உ-68)

## பயிற்சி டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவு

இலங்கை அணிக்கும் தென்னாபிரிக்க கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை அணிக்குமிடையில் கடந்த சனிக்கிழமை முதல் நடைபெற்று வந்த மூன்றுநாள் பயிற்சி டெஸ்ட் கிரிக்கெற் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி, அதன் முதல் இன்னிஙசில் 9 விக்கெற்றை இழந்து 311 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட வேளையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. இதில் இலங்கை அணி சார்பாகத் துடுப்பெடுத்தாடிய அவிஸ்ககுணவர்த்தன 64 ஓட்டங்களையும், ரங்கனகேரத் 70 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கக அணி, 7விக்கெற் இழப்பிற்கு 291 ஓட்டங்களைப் பெற்றுககொண்டது. இதனைத் தொடர்ந்து தனது 2வது இன்னிங்சில் இலங்கையணி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் இலங்கை அணி சார்பாக இலன்ஸ் டானியல் 81 ஓட்டங்களையும், யான் முபாரக் 56ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

மூன்றாம் நாள் போடடி முடிவடையும் போது தென்னாபிரிக்க அணி அதன் இரண்டாவது இன்னிங்சிற்காக ஒரு விக்கெற்றை மட்டும் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (உ-68)

## அரையிறுதியில் பங்கேற்க கனடா, ஜேர்மன் அணிகள் தகுதி

பெண்களுக்கான உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளின் அரையிறுதி ஆட்டங்களில் அமெரிக்காவையும், சுவீடனையும் எதிர்த்தாடும் தகுதியினை கனடாவும், ஜேர்மனியும் பெற்றுள்ளன.

போட்லன்ட் விளையாட்டரங்கில் கடந்தவாரம் நடைபெற்ற மூன்றாவது காலிறுதிப் போட்டியில் ரஷ்யாவை எதிர்த்தாடிய ஜேர்மனி 7:1என்ற கோல் கணக்கில் மிக இலகுவாக வெற்றியீட்டியது.

கடைசியாக நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் சீனாவை எதிர்த்து விளையாடிய கனடா கடும் போட்டியின் மத்தியில் 1:0என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டியில் விளையாடத் தகுதிபெற்றுள்ளது.

இதேவேளை, நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியனான அமெரிக்காவை ஜேர்மனி எதிர்த்தாடவுள்ளது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சுவீடனை எதிர்த்து கனடா மோதவுள்ளது.

இதன் பின்னர் மூன்றாம் இடத்திற்கான போட்டி ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதியும், சம்பியன் பட்டத்திற்கான போட்டி ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது.

(உ-68)

## தேசிய விளையாட்டுவிழா குழுநிலைப் போட்டிகள்

இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் இடமபெறும் தேசிய விளையாட்டு விழாவின் குழுநிலைப் போட்டிகளில் சில, இவ்வார இறுதியில் கொழும்பில் இடம்பெறவுள்ளன.

கிரிக்கெற்,கால்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், குத்துச்சண்டை போன்ற குழுநிலைப் போட்டிகளே கொழும்பில் உள்ள பல்வேறு விளையாட்டரங்குகளில் நடைபெறவுள்ளன.

இதேவேளை,கபடி வலைப்பந்தாட்டம், கராத்தே யூடோ, மல்யுத்தம், பளுதூக்குதல் போன்ற விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள் கொழும பின் ரொறிங்டன் விளையாட்டுக் கட்டடத்தொகுதியில் நடைபெறவுள்ளன.

மெய்வல்லுநர் விளையாட்டுக்களும் குழுநிலைப் போட்டிகளின் இறுதிப்போட்டி நிகழ்வுகள் சிலவும் எதிர்வரும் நவம்பர் மாதம் 1, 2 ஆம் திகதிகளில் குருநாகலில் உள்ள வெலகதெர விளையாட்டரஙகில் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு விழாவின் போது இடம்பெறும என இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளது.

தேசிய விளையாட்டுவிழாவை இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் நடாத்த திட்டமிடப்பட்டிருந்த போதும் மக்கள்காட்டிய எதிர்ப்பால் அது கைகூடவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-68)

# இந்திய வம்சாவளியினர் அனைவர்க்கும் பிரஜாவுரிமை

## உள்துறை அமைச்சர் உரை

(கொழும்பு)

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளியினர் அனைவருக்கும் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொடுப்பதே பிரஜாவுரிமைச் சட்டமூலத்தின் நோக்கம என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பிரஜாவுரிமைச் சட்டமூலத்தை நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

புதிய சட்டமூலத்திற்கமைய 1964 ஆம் ஆண்டு ஒகடோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இலங்கையில் வாழும் பிரஜாவுரிமையற்ற அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்கப்படும்.

இதேவேளை, இந்தக்காலப் பகுதியில் வாழ்ந்தவர்களின் வம்சாவளியணருக்கும்பிரஜாவுரிமை வழங்கப்படும்.

இந்திய வம்சாவளியினருக்குப் பிரஜாவுரிமை வழங்க சுதந்திரத்துக்குப் பின் ஆட்சிசெய்த பலரும் முயற்சி செய்தபோதும், சிறீமா சாஸ்திரி ஒப்பந்தத்திற்கு அமையவே இதனை வெற்றிகரமாக முன்னெடுக்க முடிந்தது என்று ஜோன் அமரதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விவாதத்தில் கலந்துகொண்ட பொ.ஐ.முவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம் உரையாற்றுகையில்,

அரசாங்கம் பிரஜாவுரிமைச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளத் தீர்மானித்தமை குறித்துத் தாம் மகிழ்ச்சியடைவதாகவும், இதனால், எதிர்கட்சியில் உள்ள அனைவரும் இந்தச் சட்டமூலத்திற்கு ஆதரவு தெரிவித்து பிரஜாவுரிமையற்ற அனைவருக்கும் பிரஜாவுரிமை பெற்றுக் கொடுக்கப்படவேண்டுமெனவும் குறிப்பிட்டார். (உ-8,61)

## குடிநீர்த் தட்டுப்பாட்டால்

# எதிர்கால இலங்கை பாரிய சவாலை எதிர் நோக்கும்

(கொழும்பு)

குடிநீர்த்தட்டுப்பாடு மற்றும் போதிய சுகாதார வசதி இல்லாமை காரணமாக எதிர்காலத்தில் இலங்கை பாரிய சவாலை எதிர்நோக்கலாம் என வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அச்சம் தெரிவித்துள்ளார்.

உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு, கடந்த திங்கட்கிழமை ஜோன்.டி.சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி தொடர்ந்தும் கூறுகையில்,

இந்த விடயத்தை கவனத்தில் கொண்டுள்ள அரசாங்கம் ஏற்கனவே பல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

குறிப்பாக நகரவாசிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித குடியிருப்பு ஆணைக்குழு வெளியிட்ட விபரங்களின்படி, 2015 ஆம் ஆண்டளவில் உலகின் மொத்த சனத்தொகையில் 60 சதவீதமானோர் நகர்ப்புறங்களில் வசிப்பார்கள்.

இத்தகைய நிலை இலங்கையில் ஏற்படுமானால், அதனைச் சமாளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதால் அதற்கான ஆயத்தங்கள் தற்போது தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார். (உ-60,10)

## கடவுச்சீட்டு பெறும்போது குறுக்கிடும்

# இடைத்தரகர்கள் குறித்து விழிப்பாக இருக்குமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

புதிய கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்காக குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தினை நாடுவோர் இடைத்தரகர்களிடம் சிக்கக் கூடாது என திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், எமது திணைக்களத்தினால் எதுவித சிக்கலுமின்றி புதிய கடவுசசீட்டுக்களைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அததுடன், உரிய வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களுக்கான கடவுச்சீட்டுக்கள் தாமதமின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

தேவை ஏற்படும பட்சதில் இவற்றைவட மிக விரைவாகவும் ஒரே நாளில கூடுதலான கடவுச் சீட்டுக்களை வழங்கவும் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

இதேவேளை கடவுச்சீட்டுக்களைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருவதால் அவற்றிற்கு எதுவித பணமும் செலுத்தத் தேவையில்லை என்றும் அவர் மேலும்குறிப்பிட்டார். (உ-60,10)

# தொழிற் சங்கங்கள் கூட்டமைப்பு மீண்டும் போராட்டத்தில் குதிப்பு

(கொழும்பு)

இராகமை வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் நேற்றுமுன்தினம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அண்மையில் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு மேற்கொண்ட வேலைநிறுத்தத்தின் போது தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பதில் சுகாதார சேவைக் கட்டுப்பாட்டாளர் மற்றும் தொலைத்தொடர்பு இணைப்பாளரின் நியமனங்களை இரத்துச் செய்யக்கோரியே இவ் வேலை நிறுத்தம் இடம்பெற்றது.

சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை சுகாதார அமைச்சு பதவி விலகக்கோரியுள்ள போதிலும், அவர்கள் அரசியல் செல்வாக்கினைப் பயன்படுத்தித் தொடர்ந்தும் பதவி வகிப்பதாக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

மகரகம புற்றுநோய் வைத்தியசாலை, முல்லேரியா வைத்தியசாலைகளிலும் இந்நிலை ஏற்பட்டு, சுகாதார அமைச்சரின் தலையீட்டால தீர்த்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இராகமை வைத்தியசாலையின் பிரசசினை தீர்க்கப்படாவிட்டால், வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து மேற் கொள்ளப் போவதாகத் தொழிற் சங்கங்களின் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இராகமை வைத்தியசாலையில் தற்காலிக நியமனம் வழங்கப்பட்டுள்ள ஊழியர்களுக்கு ஏறகனவே பதவி விலகும்படி அறிவிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (உ-8,61)

# செய்தித் துளிகள்

## உலக தபால் தினம்

(மருதங்கேணி)

உலக தபால் தினம், இன்று 9ஆம் திகதி சகல தபாலகங்களிலும் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பிரதம தபாலகத்தில் இன்று காலை 9.00 மணிக்கு மங்கள விளக்கேற்றல், தேசிய கொடியேற்றல் நிகழ்வுடன் உலக தபால் தினம் கொண்டாடப்படவுள்ளது. (உ-35)

## கணித- விஞ்ஞானப் போட்டிகள

(கந்தரோடை)

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கணித-விஞ்ஞானப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் அறிவித்துள்ளார். (உ-103)

## வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்களிப்பு

(வடலியடைப்பு)

யாழ்.பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினர், ''வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்களிப்பு''எனும் தலைப்பில் நடாத்திவரும் மாதாந்தக் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை மு.ப.9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் யா/மகாஜனாக்கல்லூரி ஆசிரியை திருமதி பகீரதி கணேசதுரை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக அரசறிவியலும் சமூகவியலும் துறைத்தலைவர் கலாநிதி நா.சண்முகலிங்கன், யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியரும் ஆக்கவியல் இசைக்கலைஞருமான சி.சிவஞானராஜா, பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் சோ.பத்மநாதன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளனர். (உ-21)

## கூட்டத்தில் கைகலப்பு தலைவர் படுகாயம்

(மண்கும்பான்)

பொதுக் கூட்டமொன்றில் ஏற்பட்ட்விவாதம் இறுதியில் கைகலப்பாக மாறியதில் அதன் தலைவர் படுகாயமடைந்த சம்பவம் கடந்த திங் கட்கிழமை இடம்பெற்றது.

மண்கும்பான் சிவகாமி அம்மன் ஆலயத்தின் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது, ஆலயத்தின் புனரமைப்பு தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது.

அப்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி இறுதியில் கைகலப்பாக மாறியதில் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய எஸ்.கண்ணன் (வயது-35) படுகாயமடைந்துள்ளார்.

இதையடுத்து, தற்போதுஇவர் சிகிச்சைக்காக தனியார் வைத்திய சாலையொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-56)

## கேதார கௌரி விரதம்

(குப்பிளான்)

அனலைதீவு மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் கேதார கௌரி விரதம் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 21 நாட்கள் நடைபெறவுள்ளது.

★ ★ ★

(குப்பிளான்)

குப்பிளான் கன்னிமார் கௌரி அம்பாள்ஆலயத்தில் கேதாரகௌரி விரதம் கடந்த ஞாயிறன்று ஆரம்பமாகி தொடர்ந்தும் 21 தினங்கள் அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. (உ-20)

## கத்தோலிக்க கண்காட்சி

(கந்தரோடை)

கத்தோலிக்க பாடநெறிக்கண்காட்சியொன்று ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் எதிர்வரும் 10,11ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. (உ-103)

## விபத்தில் காயமடைந்த முதியவர் உயிரிழப்பு

(வடலியடைப்பு)

மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணம் செய்தவேளை, தவறிக் கீழே விழுந்த முதியவர் 7 தினங்களின் பின்னர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 24ஆம் திகதியன்று ஆனைகோட்டை மதவடியில் இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில், படுகாயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஆனைக்கோட்டை புதுவீதியைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சாம்பசிவம் (வயது-68) என்பவரே உயிரிழந்தவராவார். (உ-21)

## காவலரணை பலப்படுத்தும் படையினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் உள்ள காவல் அரணைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் நேற்று முன்தினம் படையினர் மும்முரமாக ஈடுபட்டனர்.

மேற்படி பகுதியில் உள்ள புதிய உயர்கல்வி நிறுவனத்திற்கு முன்பாகக் காணப்படும். இந்தக் காவலரணைச் சுற்றி முட்கம்பிவேலி அமைக்கப்படுவதையும் அவதானிக்க முடிந்தது. (உ-4)

## சட்டவிரோத மின்சாரம்

(குப்பிளான்)

சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுபவர்களின் எண்ணிக்கை குப்பிளான் பகுதியில் அதிகரித்துள்ளது.

நாள் முழுவதும் பாதுகாப்பற்ற முறையில் இவ்வாறு சட்டவிரோதமாக மின்சாரம் பெறப்படுவதால், அப்பகுதிகளால் செல்வோர் பெரும் உயிர் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை,குப்பிளான் பகுதிக்கு இவ்வருடமே மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இங்கு உரியமுறையில் மின்சாரம் பெறுபவர்களைவிட, சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுபவர்களே அதிகப் பேர் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (உ-20)

## பல்கலைக்குத் தெரிவான மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்து, 2001/2002 கல்வியாண்டிற்கு யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்ற 21 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் பழையமாணவர் சங்கத் தலைவர் வ.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி சு.இராசதுரை, சிறப்பு விருந்தினராக வித்தியாலய அதிபர் க.கனகராஜா, கௌரவ விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சந்திரபாலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-8)

## கடவுள் சுவாமிகளின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 23வது குருபூசைத் தினம் இன்று வியாழக்கிழமை உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் கொண்டாடப்படவுள்ளது. (உ-8)

## நெற்செய்கைக்கு ஆயத்தம்

(தொல்புரம்)

பருவமழை ஆரம்பமாகியிருப்பதையடுத்து, சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 220 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை பண்ணுவதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. (உ-70)

## வேலையற்ற பட்டதாரிகள் கவனத்திற்கு

(வடலியடைப்பு)

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கப் பொதுக்கூட்டம் இன்று மு.ப.10.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத் தொடர்பாக முக்கியமாக கலந்துரையாடப்படவுள்ளதால், சம்பந்தப்பட்டவர்களைத் தவறாது சமூக மளிக்குமாறு சங்கத்தலைவர் கேட்டுள்ளார். (உ-21)

## பன்னிரு திருமுறை பாராயணம்

(யாழ்ப்பாணம்)

பௌர்ணமி தினத்தையொட்டி அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதந்தோறும் நடாத்திவரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் மற்றும் பன்னிரு திருமுறைகள் பாராயணம்ஆகியன இன்று வியாழக்கிழமை காலை 5.00மணிமுதல் யாழ்.வண்ணார்பண்ணை மேற்கு மதவடி ஒழுங்கை அம்பாள் ஆலயத்தில் இடம்பெறவுள்ளன. (உ-18)

## குடும்பஸ்தர் மரணம்

(மருதங்கேணி)

தாளையடியில் உள்ள மீன்வாடி ஒன்று தீப்பற்றி எரிந்ததால் வாடிக்குள் இருந்த 7 பிள்ளைகளின் தந்தை பலத்த தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

தாளையடியைச் சேர்ந்த மரியதாஸ் குலாஸ் (தாஸன்) என்பவர் மீன்வாடிக்குள் இருந்த வேளை, வாடி தீப்பிடித்ததினால் பலத்த எரிகாயங்களுக்குள்ளாகினார்.

இவர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பயனளிக்காத நிலையில் ஏழு நாட்களின் பின் உயிரிழந்தார். (உ-35)

## முஸ்லிம் இளைஞன் மீது யாழ்.நகரில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முஹமட் சயான் (வயது -17) என்ற இளைஞரே தாக்குதலுக்கு உள்ளானவராவார். நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (த)

## புதுக்கடையில் திருட்டு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டையில் அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயிலுக்கருகில் உள்ள பலசரக்குக்கடை உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் சம்பந்தமாக வட்டுக்கோட்டைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (பி-89)

## தீவகத்தில் 41 வீடுகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை மற்றும் வேலணைப் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு போரூட் நிறுவனம் வீடுகளை அமைத்துக் கொடுத்து வருகிறது.

இதனடிப்படையில்,அல்லைப்பிட்டி, மண்கும்பான் வீதியில் கறுப்பாச்சி அம்மன் ஆலயத்திற்கு அண்மையாக 24 வீடுகளும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் கொத்திகுளம் பகுதியில் 17 வீடுகளும் தலா 60 ஆயிரம் ரூபா செலவில அமைக்கப்பட்டு வருகின்றன. (உ-112)

# நோக்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும்

# இறைவனைக் கண்டவர் கடவுள் சுவாமிகள்

**கடவுள் சுவாமிகளின் 23 ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

ஈழத்தின் வடக்கே அமைந்த ஞானபூமி யாழ்ப்பாணம், இப்பிரதேசத்தில் வட மறவர் ஆண்ட பகுதி வடமராட்சியில் உள்ள அல்வாயில் சுந்தர் கணபதிப்பிள்ளைக்கும் இலட்சுமிப்பிள்ளைக்கும் இளைய மகனாக 1906ஆம் ஆண்டு சித்திரை மாதம் 28ஆம திகதி கடவுள் சுவாமி பிறந்தார்.

முருகுப்பிள்ளை என்ற இயற் பெயர் கொண்ட இவர் கடையிற் சுவாமிகள் வழித்தோன்றலாகிய சின்னத்தம்பி சுவாமிகளின் 96 சீடர்களுள் முதன்மையானவர். குருநாதரின் அருளுக்குப் பாத்திரமானவர். நோக்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் கடவுளைக்கண்டு, யாவரையும் கடவுளென்று அழைத்தமையால் ''கடவுள் சுவாமிகள்'' என்ற பெயரே நிலைத்துவிட்டது.

1976ஆம் ஆண்டில் இருந்து நித்திய மௌன விரதத்தை மேற்கொண்டு வந்தமையால் அந்த மௌன நிலையில் ஞான வரம்பைக் கண்ட அனைவரும் ''மௌனகுரு சுவாமிகள்'' என்று அழைத்தனர். இவர் தமது குருவின் வழிவந்த சித்த சிவசமரச சன்மார்க்க சமாதி குருபீடத்தை செவ்வனே நடத்தினார். ஒரு சீடர் பரம்பரையையும் உருவாக்கினார். அவரது செயல்பாடு இன்றும் நடைபெற்று வருகின்றது.

## சித்தர் பரம்பரையின் விடிவெள்ளி

ஈழத்துச் சித்தர் பரம்பரையில் விடிவெள்ளிபோல நிலவிய சுவாமிகளின் வாக்கும், வாழ்வும் ஒரு புதுமையானதே. உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே என்ற வாக்கைச் சாதனையாகக் கொண்டிருந்தார். எப்பொருளையும் தன் குருநாதனுக்கு நிவேதிப்பது இவரின் குருபக்திக்கு எடுத்துக்காட்டாகும். போதனையிலும் சாதனையை மேற்கொண்டார் கடவுள் சுவாமி.

மறவன்புலோ குழந்தைவேற் சுவாமிகள் தம் குருநாதன் வழிநின்று ஆன்மீக நெறியைப் பரப்பி வாழ்ந்து தமக்கும் பல சிஷ்யர்களை உருவாக்கினார். இவரின் சிஷ்யர்களில் முதன்மைபெறு விளங்கியவர் மறவன்புலோ அருள்மிகு சின்னத்தம்பிக் குருசுவாமிகளாவார். இவர் செல்வச் சந்நிதியின் வடக்குப் பக்கமாக ஒரு ஆச்சிரமத்தை அமைத்து அங்கு தங்கி அங்கு வரும் அடியவர்களுக்கு நல்லுபதேசம் செய்தும் அவர்கள் பசிப்பிணியைப் போக்கியும் அவர்கிளின் உயிருக்கும் உடலுக்கும் உறுதியளித்தார். இவரைச் சூழ இருந்த அடியார் கூட்டத்தில் 96 பேர் இவரின் தீட்சை பெற்றுச் சிஷ்யர்களானார்கள்.

## குருபக்தியில் சிறந்தவர்

இந்த 96 சிஷ்யர்களில் பிரதம சிஷ்யனாக விளங்கியவரே மௌன குரு கடவுள் சுவாமிகளாவார். இவர் வல்வெட்டியைத் தமது பிறப்பிடமாகக் கொண்டவர் இவர் தமது இளம் பிராயத்தில் வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டு வளம்பல பெற்று விளங்கினார். இல்லறமாகிய நல்லறத்தில் ஈடுபடடு அத் தர்மத்தை இனிது நடாத்தி வந்தார். இல்லறமாகிய நல்லறத்தை இனிது நிறைவுசெய்த சுவாமிகள் அடியார் பக்தியிலும், குருபக்தியிலும் சிறந்து விளங்கினார். தமக்கு ஒரு ஞானகுரு வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்தும் அடியார்களுக்கு இன்னமுதளித்தும் ஈழத்திலுள்ள புனித தலங்களுக்கும் யாத்திரை செய்தார்.

பாரத நாட்டுக்கு யாத்திரை செய்த பொழுது ஒரு இரவு சிதம்பர சேத்திரத்தில் தங்கிக் கண்ணயர்ந்த பொழுது உனக்கு குரு ஈழத்தில் தான் என தில்லைச் சிதம்பர நாதன் கனவில் உணர்த்தினார். சுவாமிகள் மனமுருகி அங்கிருந்து ஈழத்திற்குத் திரும்பினார். தலைமன்னாரை வந்தடைந்து யாழ்ப்பாணத்திலுள்ள கொடிகாமம் புகையிரத நிலையத்தை வந்தடைந்தார். அப்பொழுது ஒரு கருடன் சுவாமிக்கு மேல் வட்டமிட்டு செல்வச்சந்நிதி இருக்கும் திசையை நோக்கிச் செல்ல செல்வச்சந்நிதியை வந்தடைந்தார். அங்கே செல்வச்சந்நிதியில் வீற்றிருந்து அடியார்களை ஆட்கொண்டருளும் தமது குருநாதராகிய சின்னத்தம்பி குருசுவாமிகளைக் கண்டு கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிய உள்ளம் புழகாங்கிதம் அடைய மெய்யுருகி நின்றார். சுவாமிகளைத் தமது சிஷ்யனாக ஏற்று அருள்புரிந்தார் குரு சுவாமிகள்.

## நற்பணிகள் பல புரிந்தவர்

குருநாதரின் அனுக்கிரகத்தைப் பெற்ற சுவாமிகள் குருநாதருடன் சேர்ந்து பல நற்பணிகளை ஆற்றி வந்தார். சில காலம் சென்றபின் குரு சுவாமிகள் ''சுத்தசிவ சமரச சன்மார்க்க சாது சங்கம்'' என்ற சாது சங்கத்தை ஸ்தாபித்து சாதுக்களைப் பாதுகாத்து அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து வந்தார். செல்வச் சந்நிதியில் வாழ்ந்து வந்த குரு சுவாமிகள் தமது சமாதி கைகூடும் காலத்தை உணர்ந்து தமது பிறப்பிடமான மறவன்புலோவை அடைந்து அங்கும் ஆச்சிரமம் அமைத்தும் அரும்பணியாற்றி அவ்விடத்தில் மகாசமாதி அடைந்தார்.

மௌனகுரு சுவாமிகள் தமது குருநாதனுக்குப் பக்கத்தில் அமர்ந்து அரும்பணிவிடைகள் ஆற்றி அவ்விடத்திலேயே அவரின் திருவுடலை வைத்துச் சமாதிக்கோயில் அமைத்து புரட்டாதி உத்தர நட்சத்திரத்தில் வருடாந்தக் குருபூசையைக் கொண்டாடியும், நித்திய பூசைகள், பூசைகள் புரிந்தும் அரும் தொண்டாற்றி வந்தார். சில காலத்தின் பின் நித்திய பூசைகள் நிகழ்வதற்காக சில சாதுக்களை சமாதியிடத்தில் அமர்த்தி விட்டு சுவாமிகள் செல்வச்சந்நிதி அடைந்தார்.

இவர் தம்மிடம் வரும் அடியார்களையும் மற்றவர்களையும் கடவுள் கடவுள் என்று அழைத்துவந்தார். எல்லா ஜீவர்களிலும் கடவுளின் திருநடனத்தைக் கண்டார். எல்லா ஜீவர்களின் உடலும் கடவுளின் கோயில் என உணர்ந்தார். எல்லோரையும் கடவுள் கடவுள் என அழைத்த சுவாமிகள் ''எவன் ஒருவன் எப்பொருளைச் சதா காலமும் நினைக்கின்றானோ அவன் அப்பொருளாக மாறிவிடுவான்'' என்ற வேதவாக்குக்கிணங்க பிற்காலத்தில் கடவுள் சுவாமிகள் என அழைக்கப்பட்டார்.

வரும் அடியார்களை அன்புடன் உபசரிததும், நீறுபூசியும் திருநயனத்தில் தீட்சை கொடுத்தும் ஆதரித்து வந்தார். சில காலங்களுக்குப் பின் சுவாமிகள் குருவாரத்தில் மௌன விரதத்தை ஆரம்பித்து பல காலங்களின் பின் பூரண மௌனகுருவாக மாறினார்கள். அன்று தொடக்கம் மௌனகுரு கடவுள் சுவாமிகள் என பெயர்பெற்று விளங்கினார்.

தம்மைநாடிவரும் அடியவர்களுக்கு எழுத்துமூலமாக தன் உபதேசங்களைப் போதித்து வந்தார். எல்லா ஜீவர்களிலும் கடவுளைக் காண், பசித்தவர்களின் பசியைப் போக்கு. குருவுக்கும் அடியவர்களுக்கும் அயராது தொண்டு செய். உலகத்தில் உள்ள ஜீவர்கள் எல்லாம் இறைவன் படைப்பே. அவர்களை இகழாதே. ஏழைகளுக்கு உதவுவதே உண்மையான உனது உயிருக்குரிய சேமிப்பாகும். குருவின் வழியே எமது வழி. இப்படியான பல அரிய கொள்கைகள் சுவாமிகளின் இலட்சியங்களாக விளங்கின.

இப்படிப பல காலம் அருந்தொண்டாற்றி பல சிஷ்யர்களை உருவாக்கிய சுவாமிகள் புரட்டாதி மாத உத்தரட்டாதி நட்சத்திரத்தில் மகா சமாதிகூடினார்.

இவர் சமாதியெய்துவதற்கு அண்மை நாட்களில் தான் கண்ட கனவை சீடர்களுக்குக் குறிப்பாக உணர்த்தியும் இருந்தார். 72ஏக்கர் நிலப்பரப்பு ஒன்று அங்கே காணப்பட்ட புற்றுள்ள இடத்துக்கண்மையில் தான் தாடிக்கோலத்துடன் தங்கத் தகட்டின் மேலிருந்து கையில் தங்கத் திருவோடு ஏந்தியபடி சமாதி அடைவதாகக் கனவில் கண்டாதாகக்

**செல்வி மலர் பொன்னம்பலம்**

குறிப்பிட்டுள்ளார். சமாதிக்கு முதல் நாள் ''அன்பும், அறமும், தவமும் பெறவிரும்பும் சாதுக்கள் தேவை'' என்றும் அவர்களுக்கு உண்டி, உறைவிடம் வசதிகள் உண்டென்றும் விளம்பரப் பாங்கில் எழுதி வைத்துள்ளார்.

அவரின் புனித உடல் மறவன் புலோவில் உள்ள அவரின் குருநாதரின் சமாதிக்கு வலப்பக்கத்தில் வைத்து சமாதியமைக்கப்பட்டு நித்திய பூசைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

தாயுமான சுவாமிகளுக்கு வாய்த்த மௌன குருவை அவர் போற்றியது போல, நமக்கு வாய்த்த மௌனகுரு சுவாமிகளின் அடிச்சுவட்டிலே நாமும் நடந்து பிறவிப்பயனை அடைவோமாக. □


ஸாஹித்ய ஸாகரம் மஹா வித்வான்

அமரர் ந.வீரமணி ஐயா அவர்களுக்கு

சர்வதேச இந்துமத குருபீடத்தின்

**கண்ணீர் அஞ்சலி**



புகழ் பூத்த மாபெரும் கலைஞர் முத்தமிழ் வித்தகா ஸாஹித்ய ஸாகரம் மஹா வித்வான் முத்தமிழ் வீரமணி ஐயா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் மறைவு இசைத்தமிழ் உலகிற்கே பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருறும் உறவினர்கள், கலைப் பிரியர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து மஹாவித்வானின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி

ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்

(தலைவர் - இலங்கை பிராம்மண சமாஜம்)

சர்வதேச இந்துமத குருபீடம்

(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)

46, 7வது லேன், கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13

T.P. :- 2393436, 0722-422239, 0777-174714

(C/6735)


# பொ.ஐ.மு. உறுப்பினர் மீது கைக்குண்டுத் தாக்குதல்

பசறி பிரதேச சபையின் பொது ஜன ஐக்கிய முன்னணி உறுப்பினா ஒருவர் மீது கடந்த திங்கட்கிழமை கைக்குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட இக் குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் படுகாயம் அடைந்த மேற்படி பிரேதச சபை உறுப்பினரான சுனில் சில்வா, பசறி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்திய சாலைக்கு மாற்றப்படுள்ளார்.

இதேவேளை, இது தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பசறி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

(உ-61,10)

# மட்டக்களப்பு மாவட்ட 5வது உபகுழுக்கூட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் - முஸ்லிம் விவகாரங்கள் தொடர்பாக ஆராயும் உபகுழுவின் 5வது உயர்மட்டக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு வவுணதீவு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட கண்காணிப்புக் குழுத்தலைவர் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில்,முஸ்லிம் சமூகத்தினர் சார்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், வீடமைப்புப் பிரதி அமைச்சருமான வஷீர் சேகுதாவுத் தலைமையிலான குழுவினரும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சார்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டச் சிறப்புத்தளபதி ரமேஸ் தலைமையிலான குழுவினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

முன்னர் நடைபெற்ற இவ் உபகுழுக்கூட்டங்களில் முஸ்லிம்- தமிழ் மக்களின் காணிப் பிணக்குகளுக்குத் தீர்வுகள் காணப்பட்டன. என்பது குறிப்பிடத்தக்கது.

(தி-61)

## கடல் அட்டை ஏராளம்

(கந்தர்மடம்)

மன்னார், அரிப்பு, முந்தல் மற்றும் சிலாபம் ஆகிய கடற் பிராந்தியத்தில் கடல் அட்டைகள் பிடிக்கக்கூடிய சாதகமான காலநிலை ஏற்பட்டுள்ளதால் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை மீனவர்கள் அப் பகுதிகளுக்குச் சென்று தொழிலில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது.

(தி-112)

## இன்று ஒரு தகவல்

# குழந்தை வளர்ப்பு

குழந்தை வளர்ப்பென்பது ஒரு தனிக்கலை. அதற்கு வழிகாட்டக்கூடிய வகையில் சில ஆலோசனைகளைக் கூறுகின்றார் ஒரு அறிஞர். அதாவது தற்போதுள்ள சிறுவர்கள் எல்லோரும் ஆற்றல் நிறைந்தவர்களாகவே உள்ளனர். ஒருவர் கூறினார் ''எனது அம்மாவிடம் நான் கற்றுக்கொண்டதை விட இப்போது எனது பிள்ளைகளிடமிருந்து கற்றுக் கொண்டது அதிகம்'' என்றார். பிள்ளைகள் அவ்வளவு துடிப்பாக உள்ளனர். உடனே எல்லா விடயங்களையும் புரிந்து கொள்ளக்கூடியவாறு உள்ளனர்.

தற்காலச் சமூகச்சூழலும் அதற்கேற்றவாறு உள்ளது. நிறையத் தகவல்களைச் சேகரித்துக் கொடுக்கக்கூடிய வகையில் பத்திரிகைகள் வெளிவருகின்றன.

குழந்தைகளைச் சிறப்பான வகையில் நம்பிக்கை கொள்ளக்கூடிய வகையில் வளர்க்கவேண்டுமென்றால் என்ன செய்யலாம் என்று ஆலோசனைகளைக் கூறியுள்ளனர்.

அதில் மிகவும் முக்கியமானது என்னவென்றால் சிறுவர்கள் எப்படி வளரவேண்டும் எனப் பெற்றோர் விரும்புகின்றனரோ அதேபோல் தமது நடவடிக்கைகளையும் நல்லவிதமாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்பது முக்கியமானது. ஏனென்றால் சிறு பராயத்தில் பிள்ளைகள் தமது பெற்றோரிடம் தான் பழக்கங்களைக் கற்றுக்கொள்கிறார்கள்.

இதற்கு ஒரு கதையை உதாரணமாகக் கூறுவார்கள். ஒரு பெரிய நண்டு! அதற்கு ஓர்குட்டி நண்டு இருந்தது. பெரிய நண்டு இருக்கின்றதல்லவா அது குட்டி நண்டைப் பார்த்து ''உனக்கு ஒழுங்காக நடக்கத் தெரியவில்லை. நேராக நடக்கின்றாய் இல்லையே. கோணலாக ஒரு பக்கம் சாய்ந்து கொண்டு நடக்கின்றாய்'' என்று ஒரு நாள் திட்டியதாம். அப்போது அந்தக் குட்டி நண்டு கூறுகிறது இப்படி ''அம்மா நான் நேராக நடக்கின்றேன்! அதனை நீ எனக்கு நடந்து காட்டு அதன்படி நானும் நடக்கின்றேன்'' என்றது. உடனே ''நான் நடந்து காட்டுகிறேன் பார்'' என்று கூறி தாய் நண்டு நடந்து காட்டியது.

என்னவாகியது என்றால் தாய் நண்டும் சாய்ந்து சாய்ந்து தான் நடத்திருக்கின்றது. நேராக நடப்பதன் சிரமம் அப்போது தான் தாய் நண்டுக்குப் புரிந்ததாம். நான் எப்படி நடந்தேனோ அதுபோன்று தான் எனது குட்டியும் நடந்திருக்கிறது என்பது புரிந்தது.

அதனால் பிள்ளைகளுக்கு ஆலோசனை வழங்கும் முன்பு நாம் சரியாக நடந்து கொள்கின்றோமா எனப் பெற்றோர் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அதுபோல் சிறுவர்களின் திறமைகளை அவசியம் பாராட்டியே ஆகவேண்டும். இதுவும் மிக முக்கியமானது. பிழைகள் செய்து விட்டால் அதனைத் தனியாகச் சுட்டிக்காட்ட வேண்டும். கோபத்தில் எகிறிக்குதிக்கக் கூடாது. இதமாக எடுத்துக்கூறி திருத்த வேண்டும், மன்னிக்க வேண்டும். இதனால் பிள்ளைகள் தவறு செய்யும் சந்தர்ப்பங்கள் குறைந்து விட வாய்ப்பு உண்டு. உற்சாகமூட்டும்படியான விதத்தில் கதைக்க வேண்டும். உதாசீனப்படுத்தக் கூடாது. இந்த விதமாகச் செயற்பட்டால் சிறுவர்களின் தன்னம்பிக்கை வளர ஏதுவாகும்.

சிறுவர்கள்முன்பு பெரியோர் வன்முறைகளில் ஈடுபடக்கூடாது. இவை சிறுவர் மனதில் மிகவும் ஆழமாகப் பதிந்துபோய்விடும். கூடியவரை பெற்றோர் தம் பிள்ளைகள் முன்னிலையில் சண்டை செய்யாமல் இருக்கவேண்டும். கைகலப்பில் ஈடுபடாமல் இருக்க வேண்டும். இது சிறுவர்கள் மனதில் எப்படியான உணர்வை ஏற்படுத்தும் என்பதை மனோதத்துவ நிபுணர்கள் மிக்க அதிர்ச்சியுடன் கூறுகின்றனர். இவற்றை மனதில் வைத்துக்கொண்டோமானால் வீட்டில் சண்டைகள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

இதுபோல் இன்னும் சில அறிவுரைகளையும் கூறுகின்றனர். குழந்தைகளை மதிக்கவேண்டுமாம். அவர்களின் துணிச்சலைப் பாராட்ட வேண்டுமாம். அவர்களின் நற்செயல்களை இனங்கண்டு பாராட்டவேண்டுமாம். சிறுவர்கள் பண்புமிக்கவர்களாக ஆவதற்குரிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமாம். நல்ல அறிவுரைகளைக் கூறவேண்டுமாம். இப்படி நல்ல முறையில் வளர்க்கவேண்டும். எமது குறைகளை அதிகம் வைத்துக்கொண்டு பிள்ளைகளைத் திருத்த முயல்வது மிகவும் தவறானது.

ஒரு தென்னந்தோப்பில் ஒரு சிறுவன் தேங்காய் பறித்துக்கொண்டிருந்தான். இதனைத் தோப்புக்குரியவர் பார்த்துவிட்டார். அவர் உடனே இவனைப் பார்த்து ''ஏய்! தேங்காயா பறிக்கின்றாய்! இரு உனது அப்பா விடம் சொல்கின்றேன்'' என்றார். உடனே இந்தச் சிறுவன் கூறினானாம். ''அப்பாவிடம் தானே! தாராளமாக் கூறுங்கள். அப்பா இங்கே பத்தாம் மரத்தில் தான் இருக்கின்றார்'' என்றானாம்.

இளசை எஸ். சுந்தரம்

# இறக்குமதி பல மடங்கு அதிகம்

## கியூடெக் இயக்குநர் தகவல்

(யாழ்ப்பாணம்)

மக்கள் சனத்தொகையை விட, மதுவின் இறக்குமதித் தொகை அதிகமாக இருப்பதை ஆய்வுகள் பல சுட்டிக்காட்டியுள்ளன என்று கியூடெக் இணைப்பாளர் சி.ஜி. ஜெயக்குமார் அடிகளார் தெரிவித்துள்ளார்.

உலக மது ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு கியூடெக் மது விலக்குக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு கியூடெக் மண்டபத்தில் அண்மையில் இடமபெற்றபோது, தொடக்கவுரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கூறுகையில்,

இம்மதுப்பாவனையானது, எமது மக்களின் வருவாயைச் சுரண்டுவது மட்டுமல்லாது உடல், உள நோய்களையும் ஏற்படுத்தி சமூகச் சீரழிவுக்கும் காரணமாகின்றது.

இதனால் சாதாரண குடும்பத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நிலைக்கு சிறார்கள் தள்ளப்படுகிறார்கள்.

ஒரு ஆரோக்கியமான சமுதாயம் உருவாகவேண்டுமானால், இன்றைய சிறுவர்கள் அமைதியான வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

அங்கு சிறப்புரையாற்றிய யாழ். பல்கலைக்கழக சமூகவியற்றுறைத் தலைவர் காலநிதி என். சண்முகலிங்கன்,

போரினால் சீரழிக்கப்பட்ட எம் சமூகத்தில் அதன் தாக்கங்களை விட, மதுவின் சீரழிவு கட்டுப்படுத்த முடியாதுள்ளது. பத்திரிகைகளில் இன்று அடிக்கடி வருகின்ற கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம், வீதிவிபத்து போன்ற எல்லாவற்றுக்குமே மதுப்பாவனை காரணமாகவுள்ளது.

இது ஒரு தனிமனிதனை மட்டும் பாதிக்கவில்லை. அவன் குடும்பத்தை மட்டும் அழிக்கவில்லை. எம்சமூகத்தையே தொற்றுநோய் போலச் சீரழிக்கிறது என்று குறிப்பிட்டார. (உ)

# பிரதமரை வழிநடத்தும் அமெரிக்கர்

## அயல் நாடுகள் கடும் அதிருப்தி

(கொழும்பு)

அமெரிக்காவைச்சேர்ந்த பொருளாதார ஆலோசகர் ஜின் றொபேட்சன என்பவரின் ஆலோசனைக்கமையவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கை வர்த்தக அபிவிருத்திக் கொள்கைகளைக் கட்டுப்படுத்தி வருகிறார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன், மெக்சிக்கோவில் அண்மையில் இடம்பெற்ற உலக வர்த்தக மாநாட்டில் ஜின்றொபேட்சன் எனப்படும் மேற்படி, நபர் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

அவ்வாறு இலங்கை வரலாற்றில் வெளிநாட்டவர் ஒருவர் இத்தகைய உயர்மட்ட சர்வதேச மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டமை இதுவே முதல் தடவையாகும் எனவும் அந்தத் தகவல்களில் சுட்டிக்காட்டியுள்ளன.

இவர் கேம்கோட் உலக வர்த்தக மாநாட்டில், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கூட்டு நிலைப்பாட்டைக் கைவிட்டு அமெரிக்க மற்றும் ஐரோப்பிய யூனியனிற்கு சார்பான போக்கை கடைப்பிடிக்குமாறு வர்த்தக அமைச்சர் ரவிகருணாநாயக்காவை வற்புறுத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேசமயம், இலங்கையின் இந்நிலைப்பாடு குறித்து G-22நாடுகளுக்கு தலைமை வகிக்கும் இந்தியா கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

ஜின் றொபேட்சனுக்குத் தேவையான வசதிகளை இலங்கை அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவருக்கு 1.5 மில்லியன் ரூபா மாதாந்த சம்பளம் வழங்கப்படுவதாகவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க, இலங்கையின் பொருளாதார ஆலோசனைக்கு வெளிநாட்டவர் ஒருவரை அரசு நியமித்திருப்பது இலங்கைக்கு அபாயகரமானது என எதிர்க்கட்சிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கையால் எமது அயல் நாடான இந்தியா, பாகிஸ்தான் ஆகியவற்றுடன் நாம் எவ்வாறு சுதந்திரமான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சில் ஈடுபட முடியும் எனவும் எதிர்க்கட்சிகள் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (உ-10)

## இராசி பலன்

**09.10. 2003**

**(புரட்டாதி 22, வியாழன்)**

**சதுர்த்தசி- ந.ப. 12.16 வரை**

**உத்தரட்டாதி-பி.இ.2.27 வரை**

**இராகுகாலம் - 1.32 - 3.02**

**சுபநேரம் - 7.32 - 9.02**

**பூரணை விரதம்**

**மேடம்**
காரிய அலைச்சல், வீண்மனஸ்தாபம், சுப செலவு, தொழில் நன்மை.

**இடபம்**
கலந்துரையாடல், எடுத்த கருமங்கள் கைகூடும், புதிய பொருள் சேர்க்கை, போசன நன்மை.

**மிதுனம்**
அதிக பிரயாசை, நல்ல சம்பவம், தொழில் விருத்தி, நண்பர்கள் சந்திப்பு.

**கடகம்**
தேசாந்திரவாசம், திடீர்பயணம், முயற்சி தாமதம், புத்தி சாதுரியம்.

**சிங்கம்**
நண்பர்கள் வெறுப்பு, பிரயாண பயம், காரிய தடங்கல், உடல் வியாதி.

**கன்னி**
நல்ல வரவேற்பு, களஸ்திர நன்மை, செய்தொழில் முன்னேற்றம், பிரயாணம்.

**துலாம்**
ஆரோக்கியம், புதிய முயற்சி, ஜனவசியம், பிறர் உதவி.

**விருச்சிகம்**
புத்திரரால் கவலை,வியாபார நன்மை, எதிர்பாராத நன்மை, சிறு வியாதி.

**தனுசு**
மாதாசுகம், மாணவர்கல்வியில் ஆர்வம், முயற்சிதாமதம், ரோக நிலை.

**மகரம்**
கூட்டுமுயற்சி, அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, பிரயாண சுகம்.

**கும்பம்**
விதண்டாவாதம், தேவையற்ற செலவு, காரிய தாமதம், தனவிரயம்.

**மீனம்**
சிந்தனை மிகுதி, பெரியோர் சந்திப்பு, எடுத்தகாரியம் கைகூடும், புதிய திட்டமிடல்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

## கோப்பாய்-கைதடி வரையிலான

# வீதியின் இரு மருங்கும் மரங்கள் நாட்டத் திட்டம்

(தொல்புரம்)

கோப்பாய்ச் சந்தியில் இருந்து கைதடி வரையில் செல்லும் வீதியின் இரு மருங்கும் மரங்கள் நாட்டப்படவுள்ளன.

மண் அரிப்பைத் தடுத்தல், உவர்நீர் உட்புகுவதைத் தடுத்தல் ஆகியவற்றைப் பிரதான நோக்கமாகக் கொண்டு கோப்பாய் பிரதேச செயலகம் இவ் வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

தேசிய மரம்நாட்டு விழா தொடர்பான யாழ். அரச அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய இத்திட்டம் அமுல்படுத்தப்படவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-70)

# வேலை நிறுத்தங்களை கண்டிக்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

அடுத்த வரவு-செலவுத் திட்டம் மூலமாக அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் வேளையில், பொது மக்களுக்குச் சிரமம் ஏற்படுத்தும் வகையில் வேலை நிறுத்தங்களை மேற்கொள்வது அரசின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்யும் சதி வேலை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட செயற்குழுக் கூட்டம் கடந்த திங்களன்று இடம்பெற்றபோது இக் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டே நாட்டில் வேலை நிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

நாட்டு மக்களைப் பலதரப்பட்ட இன்னல்களுக்கு ஆளாக்கும் இவ் வேலை நிறுத்தங்கள் பற்றி இக்கூட்டத்தில் விசேடமாக ஆராயப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ-8,61)

# 19ஆயிரத்து 322 குடும்பங்கள் தென்மராட்சியில் மீள் குடியேற்றம்

(தனங்கிளப்பு)

தென்மராட்சிப் பிரதேசத்தில் 19 ஆயிரத்து 322 குடும்பங்களைச் சேர்ந்த 70 ஆயிரத்து 238 பேர் இற்றை வரை மீளக்குடியமர்ந்துள்ளனர்.

இதேவேளை, மேற்படி பிரதேசத்தில் போர் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்விற்கு முன்னர், 22 ஆயிரத்து 744 குடும்பங்களைச் சேர்ந்த 88 ஆயிரத்து 763 பேர் வசித்து வந்தனர்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாகவே ஏனையவர்கள் மீளக் குடியமர முடியாது அகதிமுகாம்களிலும் உறவினர் மற்றும் நண்பர் வீடுகளிலும் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர,இப்பகுதியில் உள்ள 58 பாடசாலைகளில் 6 பாடசாலைகள் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளடங்கியிருப்பதால் இயங்க முடியாது இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(உ-37)

ஒருமைக்கண் தான் கற்றகல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து
— குறள்

வலம்புரி

## மஹாவித்துவானின் பேரிழப்பு...

மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள் மறைந்து விட்டார் என்ற பெருந்துயரச் செய்தி இசை உலகில் ஈடுசெய்ய முடியாத ஓர் இழப்பைச் சுட்டி நிற்கிறது.

இசைத்துறையில் வீரமணி ஐயாவைத் தெரியாதவர்கள் இருக்கமுடியாதென்று கூறுமளவில் இசைக்கு அவர் ஆற்றிய பங்கும் பணியும் அளவிடற்கரியது.இசையை இசையாக இசைக்க வேண்டுமென்பதில் அவர் காட்டிய அககறையின் விளைவு இந்த நாட்டில் ஆற்றல் மிகு இசைக் கலைஞர்களை உருவாக்கித் தந்தது.

இசை அமைப்பதிலும்,கீர்த்தனைகளையாக்குவதிலும் அவருக்கு இணை அவர் என்றால் அதில் மிகை எதுவும் இருக்க முடியாது.

கர்நாடக சங்கீதத்தில் உச்சம் பெற்ற இந்திய இசையாளர்கள்கூட மஹாவித்துவான் வீரமணிஐயர் என்ற நாமத்தைக் கேட்டால் ஒரு கணம் எழுந்து நின்று வணக்கம் செலுத்தத் தவறுவதிலலை.

அந்தளவு தூரம் வீரமணி ஐயரின் இசைப்புலமை வியாபித்திருந்தது. இசைப்பிரியர்களின் இதயத் துடிப்பை அறிந்து அதற்கேற்றாற்போல் இசைஅமைப்பை உருவாக்கும் திறனை அவர் பெற்றிருந்ததனால் அவரது இசை அமைப்பில் உருவான பாடல்களை, கீர்த்தனைகளை பாடுவதில் தமிழகப் பாடகர்கள் ஆர்வம் கொண்டிருந்தனர். இஃது வீரமணிஐயர் இசைத்துறையில் கொண்டிருந்த உயர் நிலைக்கு நல்லதோர் சான்றாகும்.

அவர் இயற்றிய 'கற்பக வல்லியின் பொற்பதங்கள் பிடித்தேன்' என்ற பாடலை பிரபல தென்னிந்தியப் பாடகர் ரி.எம்.சௌந்தரராஜன் பாடிப்பணி கொண்டமை தமிழகத்தில் வீரமணிஐயருக்கு இருந்த மதிப்பையும்,கௌரவத்தையும் உறுதிப்படுத்தும்.

இசைக்காக வாழ்ந்து இசைக்காகத் தன்னை அர்ப்பணித்த மஹா வித்துவான் வீரமணிஐயர் இசை உலகில் ஓர் வரலாற்றுப் பதிவாகி விட்டார். இந்த உண்மையோடு அவர் ஆற்றிய இசைத் தொண்டால், ஈழத்தமிழர்களுக்கு இசைத் துறையில் ஓர் உன்னத இடம் கிடைத்தது. அவரின் பெருமையால் பெற்ற உயர்வை, ஈழத்தமிழர்கள் ஒரு போதும் மறந்து விடமாட்டர்கள்.

அதேவேளை மஹாவித்துவான் இயற்றிய பாடல்கள், கீர்த்தனைகள், நூலுருப்பெற இசைஆர்வலர்கள் உதவ வேண்டுமென்பதுடன், அவரின் வாழ்க்கைப் பதிவுகளும் நூலுருப்பெறுவது அவசியமாகும். அடக்கம், பொறுமை, தியாகம் ஆகிய உயர் குணாதிசயங்களோடு தன்னை இசைத் துறைக்கு அர்ப்பணித்த மஹாவித்துவான் வீரமணி ஐயரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

# அஞ்சல் சேவையின் அருமையை இன்று அகிலம் முழுதும் உணர்ந்து போற்றுகின்றது

இன்று உலக தபால்தினம் கொண்டாடப்படுகின்றது. ஒருவருடைய மனதை ஒருவர் அறியும் அற்புதமான சேவை தபால் சேவை. உலக மக்களின் நாளாந்த வாழ்க்கையில் இன்று தபால் சேவை இன்றியமையாத ஒரு அங்கமாகி விட்டது. அஞ்சல் சேவையானது இரகசியத்தைப் பாதுகாக்கும் ஒரு தொடர்பாடல் முறையாகும். அது மட்டுமல்ல அஞ்சல் குறைந்த செலவில் எல்லா மக்களையும் சென்றடைகின்றது. அஞ்சல் சேவையானது சாதி, மதம், அந்தஸ்து எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டுச்சீரான முறையில் செயற்படுகின்றது. ஏழை என்பதற்காக ஒருவருடைய தபால் சேவை மறுக்கப்படுவதில்லை.

அகில தேச அஞ்சல் தினம் எபபடி தோன்றியது? வட ஜேர்மனியில் தபால் நிர்வாகத்தில் உயர் பதவி வகித்த ஹென்றிச் வோன் ஸ்டீபன் (**Henrich Von Stephen**) என்பவர்தான் உலக அஞ்சல் ஒன்றியம் என்ற கருத்தை வித்திட்டவராவார்.

1874ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி பேர்ன் நகரில் அஞ்சல் பற்றி ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. இதில் 22நாடுகள் பங்குபற்றின. அஞ்சல் விடயங்கள் சம்பந்தமாக உலக நாடுகளிடையே பொது உடன்பாடு உருவானது. அதன்படி ஒக்ரோபர் 9ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அகில அஞ்சல் சங்கத்தில்:-

1) காங்கிரஸ் அதிஉயர் அதிகார சபை (**Congress**)

2) நிர்வாக சபை-தெரிவுசெய்யப்பட்ட 40 உறுப்பினர்களைக் கொண்ட சபை.

3) அஞ்சல் நடைமுறைகள் சபை: 35 உறுப்பினர்களைக் கொண்ட இச்சபை 5வருடம் செயற்படும்.

ஆகிய அங்கங்கள் உண்டு. இவை யாவும் நிர்வாகத்தை சீரபட நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சங்கத்தின் சின்னத்தை பிரான்ஸ் தேசதது சிற்பியான றெனே டி சென்ற் மாகியா (**Rene De Seint Marceaa**) தயாரித்தாா. அவரால் கருங்கற்கள், பித்தளை ஆகியவற்றைக்கொண்டு செய்யப்பட்ட சிலை 1909 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி பேர்க் நகரில் திறந்து வைக்கப்பட்டது. அந்தச் சிலையில் உள்ள ஐந்து தூதுவர்களும் (பெண்கள்) ஐந்து கண்டங்களையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாகவும் அவர்கள் பூகோளத்தைச் சுற்றி கடிதங்களைப் பரிமாறுவதாகவும் காட்டப்பட்டுள்ளது. இதுவே சங்கத்தின் உத்தியோக பூர்வ இலட்சனை.

1874ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 189 நாடுகள் இச்சங்கத்தில உறுப்புரிமை கொண்டுள்ளன. நமது நாடு 1877 இல் உறுப்புரிமை பெற்றுக்கொண்டது. சர்வதேச தபால் அமைப்பு உலக தபால் தினத்தை முன்னிட்டு உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் தபாலை விருத்தி செய்து தபாலின் உரிய பிரயோசனத்தை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்காக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இன்றைய பூகோளமயமாக்கல, தொடர்பாடல் முன்மாற்றம், தொழில் நுட்பம் காரணமாக துரிதமான தகவல் பரிமாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. உலகம் சுருங்கி விட்டது. ஆனால், உணர்வுகள் விரிந்து விட்டன. எவ்வளவு நவீன வசதிகள் வந்தாலும் தபாலுக்கு மாற்றீடு இல்லை. மக்களின் மகிழ்ச்சிக்காகவே தபால் சேவை என்ற கோட்பாடு என்றும், எங்கும், எதிலும் முதன்மையாக நிற்கின்றது. ஒட்டிய கவரில் வரும் உள்ளத்து உணர்வுகளை, இனிய இன்ப நினைவுகளை அசை போட்டு மீட்பதில் தான் எத்தனை இன்பம்? இதுவே தபாலின் மகத்துவம். வாரத்தில் 6 நாட்களும் ஒரு அஞ்சலர் சேவை செய்கின்றார். ஒரு கடிதம் இருந்தால் கூட ஒரு வீதிக்கு அவர் செல்ல வேண்டும். அஞ்சலரைக் காணாதவர்கள் கிராமத்திலோ, நகரத்திலோ இருக்கமுடியாது. ஒரு அஞ்சலரின் பணி புனித பணி. எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற அன்பு மகனின் இன்பக்கடிதத்தை எதிர்பார்த்து காத்திருககும் தாய்க்கு தபால் சேவகரின் பிரசன்னம் எத்துணை ஆனந்தத்தை அளிக்கும் என்பதனை நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு தபால்காரனின் மணியோசை அல்லது விசில் ஓசை மக்களுக்கு பழகிவிட்ட அற்புதமான உணர்வோசையாகவும், உயிரோசையாகவும் இருப்பது ஆச்சரியமான ஒன்றல்லவே.

தபாலிற்காகக் காத்திருக்காத கண்கள் உண்டா? நியமனக்கடிதங்கள், வங்கிக் கடிதங்கள், அன்புக் கடிதங்கள், சமயக்கடிதங்கள், பிரசுரங்கள் எனப் பல வகைக் கடிதங்களும் அஞ்சல் திணைக்களத்தால் விநியோகிக்கப்படுகின்றன.

இன்று யாழ்.குடாநாட்டில் 30 தபாலகங்களும், 167 உப தபாலகங்களும் 14 முகவர் தபாலகங்களும் இயங்கி அளப்பரிய சேவையாற்றுகின்றன. நாளாந்தம் வவுனியாவில் இருந்து தபால்கள் வருகின்றன. தபால் திணைக்களம் தங்களாலான சிறந்த உரிய சேவையை இன்று யாழ்.குடாநாட்டு மக்களுக்கு வழங்குகின்றது என்பது வெளிப்படை.

**சம்பந்தர் சிவராஜசிங்கம்**
**மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர்.**

இன்றுவரை கடிதத்தின் தேவை குறையவில்லை. சர்வதேச விற்பன்னர்களின் கணிப்பின்படி ஒவ்வொரு ஆண்டும் 2% கடிதசேவை கூடிக் கொண்டே போகின்றது.இது ஒருசாதனை மட்டுமல்ல, உள்ளங்களின உணர்வுப் பரிமாற்றத்தில் கடிதம் எத்துணை பங்கு வகிக்கின்றது என்பதற்கு அசையாத அச்சாணி போன்றசான்று.

உலகம் விரியலாம், உணர்வுகள் விரியலாம், தொழில் நுட்பம் உயரலாம், விஞ்ஞான விந்தைகள் அதிசயத்தை ஏற்படுத்தலாம். ஆனால், மிக மலிவான விலையில் கிடைக்கும் ஒட்டப்பட்ட இரகசியம் பேணும் கடிதத்திற்கு மாற்றீடு இல்லை. இதுவே யதார்த்தம்.

அஞ்சலின் அருமையை உணர்வதற்கு அஞ்சல் தினம் சகலருக்கும் உதவட்டும். தொழில்நுட்ப சவால்களை வெற்றிகண்டு வீரியத்துடன் நடைபோடுகின்றது தபால். அதனால தபால் மக்களின் உணாவாகவும், உயிராகவும் இருப்பதில் விந்தை ஏதும் இல்லை.□

## பயன்தரு மரக்கன்றுகள் விநியோகம்

(தொல்புரம்)

உலக உணவுத் தினத்தை ஒட்டி கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் தெரிந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு 5ஆயிரம் மர முந்திரிகைக் கன்றுகளும் 10ஆயிரம் தென்னங் கன்றுகளும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டச் செயலகம் இதற்கான பரிந்துரையை வழங்கியுள்ளது.

(உ-70)

## இருமாடிக் கட்டடம் நிர்மாணம்

(பருத்தித்துறை)

துன்னாலை மகளிர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கம், சுமார் 20இலட்சம் ரூபா செலவில் மாடிக் கட்டடத்தைக் கொண்டதாக நிர்மாணிக்கவுள்ளது.

இதற்கான காணியை துன்னாலை மகளிர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத் தலைவி பண்டிதை திருமதி பத்தினிப்பிள்ளை வல்லிபுரம் கொள்வனவு செய்து சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இம் மாடிக் கட்டடத்தில் சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்க அலுவலகம், வசந்தம் முன்பள்ளி என்பன இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-52)

# வங்கக் கடற்கரையில் தீர்த்தமாடும் வல்லிபுரத்தானை வணங்கிடுவீர்!

முன்னொரு காலத்திலே கற்கோவளம் வாழ் மீனவத் தொண்டர்கள் வங்கத்துக் கடற்கரையிலே மீன்பிடித்துக்கொண்டிருந்தனர். ஓர் அதிசயமான மச்சம் ஒன்று வலையிலே அகப்படாது கடலைக் கலக்கித் துள்ளி விளையாடி நின்றது. இந்த அதிசயச் செய்தி அயற் கிராமங்களுக்கு எட்டியது. அயலில் உள்ள கிராம மக்கள் எல்லோருமம கடற்கரையில் திரண்டு நின்று பார்ததனர்.

லவல்லி நாச்சியார் என்ற பக்தி நிறைந்த பெண்மணி கடற்கரையில் அமர்ந்து வணங்கிக்கொண்டிருநதார். மச்சமானது கரைக்குத் துள்ளி வந்து லவல்லி நாச்சியாரின மடியிலே விழுந்தது. விழுந்தவுடன் அழகு நிறைந்த குழந்தையாக மாறியது. அதன் கைகளில் சங்கும் சக்கரமும் காணப்பட்டது. மக்கள் எல்லாரும் உச்சிமீது கைகளைத் தூக்கி வணங்கி கோவிந்தா! மாயவா! என்று உரக்கக்கூறி நின்றனர். உடனே குழந்தை மச்சமாகித் துள்ளிச்சென்று கடலில் மறைந்தது.

சிறிது நேரம் செல்ல ஒரு பிராமணர் கையில் சக்கரத்தைப் பிடித்துக்கொண்டு வந்தார். ''மகிமை பெற்ற தொண்டர்களே! இந்தச் சக்கரத்தைப் பிரீதியுடன் ஏற்று நல்ல இலக்கணத்தில் பிரதிட்டை செய்து வணங்கி வாருங்கள். உங்களுக்கு எல்லாவித நன்மைகளும் கிடைக்கும்" எனறு சொல்லி ஒரு தொண்டரிடம் சக்கரத்தைக் கொடுத்தபின் மறைந்தார். அந்தச் சக்கரமே ஆலயத்தில் அமைந்துள்ள வல்லிபுர சுவாமி ஆவார். வக்கரத்தாழ்வாா சுவாமிகள் எனவும் வல்லிபுர சுவாமி எனவும் அழைக்கப்படுகிறது. லவல்லி என்ற பக்தையுடன் சம்பந்தப்பட்ட இடம் வல்லிபுரம் என அழைக்கப் படுகிறது.

**வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தீர்த்தோற்சவத்தை சிறப்பிக்கும் வகையில் இக்கட்டுரை பிரசுரிக்கபபடுகின்றது.**

மச்சம் விளையாடிய இடமே தீர்த்தககரையாகும். இது கோவிலில் இருந்து இரண்டு மைலில் அமைந்துள்ளது. தீர்த்த விழாவின் போது ஐந்துதலை நாகம், கருடன், அனுமார் ஆகிய வாகனங்களில் சுவாமிகள் செல்வர். புரட்டாதி மாதப் பூரணைத் தினத்தன்று சமுத்திர தீர்த்தம் நடைபெறும். கற்கோவளம வாழ் அடியார்கள் சுவாமிகளைச் சுமந்து செல்வர். அவர்கள் சுமந்து செல்லும் போது களைப்புமாற,

''அடடா ராவணா-விடடாசீதையை
கோவிந்த மலையினைக-கையிலே
ஏந்தியே''

என்று உரத்துக் கூறிக்கொண்டு மிகத் துரிதமாகச் சுமந்து செல்வர். அடியார்களும் அவர்களுடன் உரக்கச் சொல்லிக்கொண்டு செல்லும் போது பக்தி நிலைஅதிகரிக்கும். கடற்கரையிலே தாகசாந்தி நிலையங்கள் வியாபார வாகனங்கள் எல்லாம காணப்படும். ஆயிரக்கணக்கான அடியார்கள் கூடிநிற்பர். சுவாமி வள்ளத்திலே கடலில் சென்று தீர்த்தமாடுவார். அப்போது கடல்அலைகள் மலையென உயர்ந்து கரையை நோக்கி வந்து கரையின்மேல் நீர்பரவும். அந்த நீரில் அடியார்கள் தீர்த்தமாடி நேர்த்திக்கடன்களை முடித்துக் கொள்வர். கடற்கரையினை நோக்கும் போது காவிரிப்பூம்பட்டினத்திலே நடைபெற்ற இந்திர விழா எமது ஞாபகத்திற்கு வரும். பூரணை நிலவொளியில் சுவாமிகளுடன் அடியார்கள் வல்லிபுர ஆலயம் நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் காட்சி வர்ணிக்க முடியாததாக அமையும்.

*கந்த முருகேச தாசனார்.*




சாயி அருளமுதம்

சாதாரணமாக நோக்குபவர்களுக்கு ஒருவர் ஏழையாகவும், துன்பமுற்றவராகவும், தளர்வுற்றவராகவும் காட்சியளிக்கக் கூடும். அவருடைய புறத்தோற்றம் பக்தியை வெளிக்காட்டாதிருக்கக்கூடும். ஆனால் இறைவன் என்றும் அவருடைய இதயத்தில் நிலை கொண்டிருந்து அவரை வழிநடத்தி இரட்சித்துக் கொண்டிருப்பார். அவர் செய்யும் சகல கருமங்களையும் தமது இதயத்தில் குடிகொண்டிருக்கும் இறைவனுக்கு வணக்கமாக அவர் செய்து கொண்டிருக்கக் கூடும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை


## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் போராட்டம் தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நிரந்தர நியமனங்கோரி நடாத்திவரும் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை நான்காவது வாரமாகத் தொடர்கினறனர்.

கடந்த மாதம் 22ஆம் திகதி முதல், வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலகத்திற்கு முன்பாக சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்திவரும் இவ் ஆசிரியர்கள், உலக ஆசிரியர் தினமான கடந்த 6ஆம் திகதி கறுப்புப்பட்டி அணிந்து கரிநாளாகவும் அனுட்டித்தனர்.

சம்மாந்துறை, மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று, கந்தளாய ஆகிய பிரதேசக் கல்வி வலயங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆசிரியர்கள் 140பேர் கடந்த திங்கட்கிழமை முதல் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் இணைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை உண்ணாவிரதிகளைச் சந்தித்த கந்தளாய்ப் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர் குணரட்ண, தனது ஆதரவினைத் தெரிவித்தும், பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு உடன் நியமனம் வழங்கக் கோரியும் இலங்கை ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் கல்வி அமைச்சருக்கும் அனுப்பிய கடிதத்தின் பிரதியையும் சங்கப் பிரதிநிதிகளிடம் கையளித்துள்ளார்.

(உ)

## நீராவியடி கொலைச் சம்பவம்

# மனிதாபிமான அடிப்படையில் ஓட்டோ சாரதி செயற்பட்டார்

(யாழ்ப்பாணம்)

கடந்த 6ம் திகதி நீராவியடிப் பகுதியில் வெட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இளைஞனை ஓட்டோவில் ஏற்றிச் சென்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்த ஓட்டோ சாரதி பொலிஸில் சரண டைந்தார் என்ற செய்தி தவறு என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பிரஸ்தாப சாரதி ஓட்டோவில் வந்து கொண்டிருந்த போது ஓட்டோவை மறித்த இளைஞர்கள் சிலர் மோட்டார் சைக்கிள் வீதியில் இளைஞர் காயப்பட்டதாகவும் அவரை வைத்திய சாலையில் சேர்க்குமாறும் கேட்டுக் கொண்டனர். அதற்கு ஓட்டோ சாரதி அவர்களில் ஒருவர் தன்னுடன் கூட வர வேண்டும் என கூறியதாகவும் அதன் பிரகாரம் ஓட்டோவை மறித்த இளைஞர் ஒருவர் காயமடைந்த இளைஞனுடன் ஓட்டோவில் சென்று யாழ் போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்த தாகவும் பின்னர் அந்த இளைஞனே பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தாகவும் தெரியவந்துள்ளது.

காயமடைந்த இளைஞனை மனிதாபிமான அடிப்படையிலேயே ஓட்டோ சாரதி ஏற்றிச் சென்றார். அவரின் மனிதாபிமானப் பணியை பலரும் பாராட்டியுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## வீரமணிஐயரின் மறைவு தமிழ் உலகிற்குப் பேரிழப்பு

### சர்வதேச இந்துமத குருபீடாதிபதி அனுதாபச் செய்தி

கவிமாமணி கலாபூஷணம் கலாரத்தினா மகா வித்துவான் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர் அவர்களின் திடீர் மறைவு கேட்டு பெரும் அதிர்ச்சியுற்றேன். அந்தனகுலத்தில் உதித்து முத்தமிழிலும் அறிவு பெற்று பல ஆக்கங்களையும் இயல், இசை, நாடகங்களையும் வெளிப்படுத்தி தமிழ் உலகமே சிந்திக்க வைக்கும் அளவுக்கு அவர் ஆற்றிய சேவை என்றும் நினைவில் இருக்கும்.

இவ்வாறு மகாவித்துவான் வீரமணிஐயரின் மறைவு குறித்து சர்வதேச இந்து மதகுருபீடாதிபதி ஐ.மகேஸ்வரக்குருக்கள் விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது; கம்பீர நடை, கனரம்மியமான வசனம், முகத்தில் புன்சிரிப்பு, அன்பு, தயை ஆகிய பண்புகள் நிறைந்த வீரமணி ஐயர் தனது இசைத்திறத்தால் எல்லோரையும் கவர்ந்தவர். இவர் இயற்றிய கற்பகவல்லியின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதி அருள்வாயம்மா" என்ற இராகமாலிகைக் கீர்த்தனை இசை ரசிகர்களின் பெரும் பாராட்டைப் பெற்றது. இசைத் துறையில் பெரும் சாதனை படைத்த வீரமணி ஐயரின் இழப்பு தமிழ் இசை உலகிற்கு பேரிழப்பாகும் என்று தெரிவித்துள்ளார்.

## இளைஞர் குழுவினர் சேஷ்டை

## மாணவி யாழ்.பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

இளைஞர் குழுவொன்று தொடர்ந்து தன்னை கேலிசெய்துவருவதாகவும், சேஷ்டை புரிவதாகவும், பாடசாலை மாணவி ஒருவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் கல்விபயிலும் பிரஸ்தாப மாணவி. இளைஞர் குழுவினர் தொடர்ந்து மேற்கொள்ளும் இச் சேஷ்டைகளால் தான் பாதிப்படைந்துள்ளதாக அம்முறைப் பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

தினமும் பாடசாலைக்குச் செல்லும் போதும் வரும் போதும் இவ் இளைஞர்குழு தகாத வார்த்தைகளால் ஏசுவதாகவும் முறைப்பாட்டில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-4)

## சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீராவியடிப் பகுதியில் வெட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் யோகேஸ்வரன் அஜந்தீப்பின் மரணம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூவர் நேற்று யாழ். பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த கண்ணன், விவிந்தன் மற்றும் நீரவியடியைச் சேர்ந்த சுதாகர் ஆகியோரே ஆஜர் செய்யப் பட்டவர்களாவர்.

இதே வேளை சம்பவம் தொடர்பாக யாழ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## பல்கலைக் கழக அனுமதி விண்ணப்பத் திகதி நீடிப்பு

(கொழும்பு)

2003/2004-ம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக் கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் திகதி இம் மாதம் 20ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த விண்ணப்பங்களை அனுப்புவதற்கனா முடிவுத்திகதி செப்ரெம்பர் 30-ம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும், அக் காலப் பகுதிக்குள் விண்ணப்பிக்காத மாணவர்கள் இம் மாதம் 20-ம் திகதிக்குள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு அறிவித்துள்ளது. இவற்றைத் தபால் மூலமே அனுப்பி வைக்க வேண்டும் என்றும் ஏற்கனவே பல்கலைக்கழகங்களில் பதிவுகளை மேற்கொண்டிருப்பவர்கள் தங்களது 2003ம் ஆண்டின் பெறுபேறுகளுக்கேற்ப புதிய விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை பழைய பதிவுகளை இரத்துச் செய்வதற்கு ஒக்ரோபர் 20-ம் திகதிக்கு முன்னர் உரிய பதிவாளர்களுக்குத் தபால் மூலம் அறிவிக்க வேண்டும் என்றும் மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம)

## குரங்குப்பாஞ்சான்...

நிலையில் தென்னிலங்கை ஊடகவியலாளர்களும் திருகோணமலை மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களும் அதன் பிரதித்தலைவரும் இப் பகுதிக்கு நேரடி விஜயத்தை மேற் கொண்டிருந்தனர்.

தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் பலத்த சிரமத்தின் மத்தியில் வாகனங்கள் மூலமாகவும் கால் நடையாகவும் குரங்குப்பாஞ்சான் முகாம் பகுதிக்குச் சென்றிருந்தனர். அங்கு சுமார் 20க்கும் அதிகமான விடுதலைப் புலிப் போராளிகள் காணப்பட்டதாகவும் அவர்களில் சிலர் ஆயுதபாணிகளாக முகாம் பகுதியில் காவல் கடமையில் ஈடு பட்டிருந்ததாகவும் அங்கு சென்ற ஊடவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். அதேவேளை அங்கு இரண்டு சிறிய முகாம் இருப்பதாகவும் கூறப் பட்டுள்ளது.

முகாம்களைப் பார்வையிட்ட பின் ஊடகவியலாளர் மாநாடு ஒன்று அங்கு நடைபெற்றது. அம் மாநாட்டில் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப் பாளர் திலக், குரங்குப்பாஞ்சான் முகாம் பகுதி இராணுவப் பொறுப் பாளர் நிமல் ஆகியோர் தலைமை வகித்தனர்.

இம் மாநாட்டில் ஊடகவியலாளர்களின் சரமாரியான கேள்விக் கணைகளுக்கு திருகோண மலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் பதில் அளிக்கையில்;

குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பாகத் தென்னிலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் பொய்ப் பிரசாரங்களை முடிவுக்குக் கொண்டு வரும் வகையிலேயே இச் செய்தியாளர் மாநாடு நடத்தப்படுகிறது. கடந்த ஆகஸ்ட் மாதமளவில் இம் முகாம் தொடர்பான செய்திகள் வெளிவந்த போதும், இம் முகாம் தொடர்பாக அரசும் விடுதலைப் புலிகளும் சமர்ப்பித்த ஆவணம் நோர்வேயின் பரிசீலனையில் இருந்தமையால் நிலைமையை மேலும் சிக்கலுக்குள் மாட்டிவிடாது, இருப்பதற்காக அப்போது ஊடகவியலாளர்களை அங்கு அழைத்துச் செல்வதைத் தவிர்த்தோம் என்றும் திலக் தெரிவித்தார்.

இச் செய்தியாளர் மாநாட்டின் போது அங்கு பிரசன்னமாகியிருந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு' பதில் அளிக்கையில்; குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அன்று தெரிவித்த தனது நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை என்றும், முகாம் பகுதி அரச கட்டுப்பாட்டுப் பகுதியில்தான் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க வெருகல், இலகந்தை பகுதிகளில் விடுதலைப் புலிகள. புதிய முகாமை அமைத்து வருவது உண்மைதானா என்று ஊடகவியலாளர்கள் கேட்ட போது அது தொடர்பாக இன்று அப் பகுதிகளுக்கு உங்களை நேரில் அழைத்துச் சென்று உண்மை நிலையைத் தெளிவுபடுத்துவோம் என்றும் திலக் தெரிவித்தார். (ம)

## படையினருக்கு கலகமடக்கும்பயிற்சி

(திருநெல்வேலி)

அரியாலை கிழக்கில் உள்ள 514 ஆவது படைப்பிரிவில் பெருமளவு படையினர் கலகம் அடக்கும் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த இரு நாட்களாக மாலை நேரங்களில் படையினர் இப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். (இ-5,43)

## போராளி வீரச்சாவு

(திருநெல்வேலி)

திருகோணமலை மூதூரில் கடந்த மாதம் 20ம் திகதி தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை செம்பருதி (சோமசுந்தரம் ரகு- புளியடிச் சோலை திருகோணமலை) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார். (இ-5,43)

## வீரமணிஐயர்...

15.10.1931 அன்று இணுவிலில் பிறந்த வீரமணி ஐயர் கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகவும், யாழ். பல்கலைக் கழக நுண் கலைப் பீடத்தில் அதிதி விரிவுரையாளராகவும் கடமையாற்றியவர்.

பக்திப் பாடல்கள், கீர்த்தனைகள் பலவற்றை இயற்றி இசையமைத்து இசைத்துறையில் பெரும் சாதனை படைத்த வீரமணி ஐயர் ''கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதி அருள்வாயம்மா'' என்ற பாடலை இயற்றியதன் மூலம், இசைத்துறையில் பெரும் புகழை ஈட்டிக் கொண்டார். இவர் இயற்றிய பாடல்களை தென்னிந்திய இசை மேதைகளான ரி.எம்.சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன் கே.பி. சுந்தராம்பாள், மலேசியா வாசுதேவன் போன்றோர் பாடியுள்ளனர்.

தமிழகத்தில் கர்நாடக சங்கீதம் பரத நாட்டியம் ஆகியவற்றில் உயர் தரத்தைப் பெற்ற வீரமணி ஐயர் அவர் களின் இறுதிக் கிரிகைகள் நேற்று மாலை இடம்பெற்றது. (ந)

## இடைக்கால சபை....

நேசன் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் கிருஷ்னேபல் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் ஜென் மக்கறறோ ஆகியோர் முதலாவது அமர்வில் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்கள்.

தேநீர் இடைவேளைக்குப் பின்னர் இடம்பெற்ற அமர்வில், பிரித்தானிய பேராசிரியர் சொர்ணராசா,

இவர் பாரிஸில் இடம்பெற்ற திட்டவரைபு ஆராய்வின் போது கலந்து கொண்டவர் மற்றும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்மும் கலந்து கொண்டார்.

அயர்லாந்தில் நடைபெறும் இக் கலந்துரையாடல் 16ம் திகதி வரை நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மினிபஸ் - ஓட்டோ விபத்து

யாழ்ப்பாணம் வின்சர் சந்தியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற மினிபஸ் ஓட்டோ விபத்தில், ஓட்டோ தடம்புரண்டு தலை கீழாகக் கவிழ்ந்தது.

ஓட்டோவில் பயணிகள் இல்லாத படியால் உயிர்ச் சேதம் ஏற்பட வில்லை. ஓட்டோச் சாரதியும் தெய்வாதீனமாக தப்பினார். (இ-72)

## பிரதமரின்...

நாடுகளுக்கு எதிராக எடுக்கும் ஒரு தலைப்பட்சமான நடவடிக்கைகளைப் பிரதமர் ஆதரித்துள்ளார்.

அத்துடன் பிரதமர் ஐ.நா சபையில் தெரிவித்த கருத்துக்கள் அனைத்து முஸ்லிம் சமூகத்திற்கு எதிரானது இதனால் அரபு நாடுகளுக்கும் இலங்கைக்குமிடையான இருதரப்பு வர்த்தக உடன்படிக்கை பாதகமடையும். இதற்காக பிரதமரும், ஐ.தே.மு. அரசும் மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் தேரர் கேட்டுக் கொண்டார்.

ஏனைய 2அமைச்சர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த தேரர், லங்கா சமசமாஜக் கட்சி சார்பில் தான் கருத்துத் தெரிவித்ததாகவும், முழு எதிர்க்கட்சியினரும் இதற்கு ஆதரவு தெரிவிப்பார் என்று தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.(இ-6)

## கூட்டமைப்பினர்...

வழங்குமாறு பிரதமரிடம் கோருவதென வும் தேர்தல் முறையை மாற்றியமைப் பதெனவும் தீர்மானிக்கப்பட்டது

அத்துடன் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு பிரதமரிடம் கோருவதெனவும், தேர்தல் முறையை மாற்றி அமைப்பது அவசியமற்றதென வலியுறுத்துவதெனவும் தீர் மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, மாவை.சேனாதிராஜா, இரா.சம்பந்தர், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என்.ரவிராஜ், சந்திரநேரு, செல்வம் அடைக்கலநாதன், துரைரட்ணசிங்கம், சிவசக்தி ஆனந்தன் மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உப தலைவர் கலாநிதி குமரகுருபரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ)

## ஆங்கில பாட செயலமர்வு

(குப்பிளான்)

தீவகக் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான ஆங்கில பாட செயலமர்வு நாளை நல்லூர் பிரதேச ஆங்கில மன்றத்தில் நடைபெறவுள்ளது.

அச் செயலமர்வில் தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும், ஆங்கிலததில் ஆர்வம் உள்ள ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (த-5,20)

## சிறுவர் துஷ்பிரயோகம் இரு பிக்குகள் கைது

(கொழும்பு)

கொழும்பில் உள்ள அநாதை விடுதி ஒன்றில் தங்கியிருந்த 16 சிறுவர்களைத் தகாத முறையில் சிறுவர் துஷ்பிரயோகம் செய்த இரு புத்த பிக்குகள் உட்பட 10 பேர் கொழும்புப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுவர் துஷ்பிர யோகம் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக சிறுவர்களின் பாதுகாப்புக்கான தேசிய அமைப்புக் கூறியுள்ளது.

யுத்த காலத்தில் பெற்றோரை இழந்த சிறுவர்களை பராமரிப்பதற்காகவே இவ்விடுதி ஆரம்பிக்கப் பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-5)

## வீதியால்...

சிகிச்சைக்காக இவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதி மதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துக்குக் காரணமான இராணுவப் போக்குவரத்து பஸ் கச்சாய் புகையிரத வீதிக்கருகில் உள்ள படைமுகாமுக்குள் சென்று மறைந்து விட்டது.

இதனால் கொதிப்படைந்த சாவகச்சேரி நகரப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு மேற்படி முகாமுக்கு முன்பாகக் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

இதனால் அப்பகுதியில் நேற்று மாலை பெரும் பதற்றம் நிலவியது.

நிலைமையைச் சமாளிக்க பெருமளவு இராணுவத்தினரும் கலகம் அடக்கும் பொலிசாரும் நகரப் பகுதி எங்கும் குவிக்கப்பட்டனர்.

சாவகச்சேரிப் பொலிஸார் சம்பவம் குறித்து ஆராயந்ததுடன், உடன் விசாரணை நடத்துவதாக உறுதியளித்ததை அடுத்து பொது மக்கள் தமது போராட்டத்தைக் கை விட்டு கலைந்து சென்றனர். (இ)


தென் இந்தியத் திருச்சபை - யாழ் ஆதீனம்
அமெரிக்கன் இலங்கை மிஸன் அச்சகம்

அன்புடையீர்,
எதிர் வரும் 10.10.2003 வெள்ளிக்கிழமை மாலை 4.00மணிக்கு
பேராயர் கலாநிதி அதி.வண.சு.ஜெபநேசன் அவர்களால்
புதிய ஓவ் செற் அச்சகம்
464, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
யாழ்ப்பாணக் கல்லூரி - பட்டப்படிப்புப் பிரிவு வளாகத்தில்
(யாழ்.மருத்தவமனை முன்பாக)
ஆரம்பிக்கப்படவுள்ளது

இவ் ஆரம்ப வைபவத்தில் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

அ.ஜெயக்குமாரன்
செயலர்
தென் இந்தியத் திருச்சபை - யாழ் ஆதினம்
வட்டுக்கோட்டை
[C/6736]



THE ROYAL COLLEGE OF JAFFNA
6 மாத காலத்திற்குள் கதைக்கப் பயில புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன
By வஸிக்னேஸ்வரன் ஆச்சாரி
426,(302) K.K.S ROAD, JAFFNA
BLACK ROAD, CHANKANAI
(7666)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.